விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1994)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 10 வெள்ளிக்கிழமை (23.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125



## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி யாழ்.பல்கலையில் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உடைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிர் மாணிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி இரவு பல் கலைக்கழக நிர்வாகத்தினால் உடைக்கப்பட்டது.

இதையடுத்து மாணவர்கள், தமிழ் உணர்வாளர் கள், அரசியல் தலைவர் 19

## யாழில் நள்ளிரவு கொள்ளை பிரதான சந்தேக நபர் கைது

### 18 பவுண் நகைகள், பணம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வயோதிபர் வசிக்கும் வீடுகளில் நள்ளிரவில் புகுந்து வாள்களைக் காண்பித்து அச்சுறுத்தி கொள்ளையிடும் கும்பலின் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 18 தங்கப் பவுண் நகைகள், பணம் மற்றும் வாள்கள் என் 19

# இலங்கையில் பரவும் திரிபடைந்த பிரிட்டன் வைரஸ்

## நாடு மீண்டும் முடக்கப்படுமா?

## ஜனாதிபதி தலைமையில் இன்று இறுதி முடிவு

(கொழும்பு)

பிரிட்டனில் பரவி வரும் உருமாறிய புதிய கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வைரஸ் நாடு முழுவதும் பரவுவதை தடுக்க இலங்கையை மீண்டும் முடக்குவதா? இல்லையா? என்ற தீர்மானம் எடுப்பதற்கு ஜனாதிபதி தலைமையில் இன்று விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இலங்கையில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸை பி.சி.ஆர் சோதனைகளில் அடை யாளம் காண்பதில் சிரமம் உள்ளதாக ஜெயவர்தனபுர பல் கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் 19

## கொழும்பு துறைமுக சட்டமூலம் அபாயமானது ரணில்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகம் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம், மிகவும் அபாயகரமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகர் தொடர்பில் அரசாங்கம், அனைத்து தரப்பினருடனும் கலந் துரையாடல்களை நடத்த வேண்டும். கொழும்பில் நிதி 19

## +657 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் 19

## மிருசுவிலில் 8 பேரைக் கொலை செய்த இராணுவச் சிப்பாய்களை ஜனாதிபதி விடுவித்தது தவறு

### பாராளுமன்றத்தில் சரத் பொன்சேகா



(கொழும்பு)

மிருசுவிலில் 8 பேரை படுகொலை செய்த இராணுவச் சிப்பாய் சுனில் உள்ளிட்ட இரா ணுவ சிப்பாய்களை ஜனாதிபதி கோட்டா விடுவித்தது தவறு என பாராளுமன்றில் சரத் பொன்சேகா தெரி வித்துள்ளார்.

பாராளுமன் றில் வைத்து நேற்றைய தினம் கருத்து தெரி விக்கும்போதே அவர் இந்த விட யத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், மரண தண்டனை கைதி யாக தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் எம்.பி துமிந்த சில்வாவை 19

### 28 நாட்களாக முடக்கப்பட்டிருந்த

## திருநெல்வேலி பாரதிபுரம் இன்றுடன் விடுவிக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கடந்த 28 நாட்களாக கண் காணிப்பு வலயமாக உள்ள திரு நெல்வேலி பாரதிபுரம் பகுதி இன்று வெள்ளிக்கிழமை முதல் விடுவிக்கப்படும் என யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதய கொரோனா 19

## தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸில் இணைய வேண்டும்

### யாழில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தின் பொலிஸ் நிலையங்களுக்கு தமிழ் மொழி தெரிந்த இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்வதற்கு பொலிஸ் தலைமையகம் முழுமை யான அர்ப்பணிப்புடனான சேவை யினை எதிர்காலத்தில் வழங்கும் என இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் 19

## யாழ்ப்பாணத்தில் மேலும் 16 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று வியாழக் கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக் கழக மருத்துவபீட 19

## 5 கொரோனா பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் நேற்று [illegible] 19

## சுகாதார நடைமுறைகளுடன் பாடசாலைகள் நடைபெறும்

### யாழ்.மாவட்ட அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள் தொடர்ந்து நடை பெறும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தின் தற் போதைய கொரோனா நிலைமைகள் தொடர் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தந்தை செலுத்திய முச்சக்கர வண்டியில் சிக்கி ஒன்றரை வயது குழந்தை பலி

## பிபிலைப் பகுதியில் பரிதாபம்

(கொழும்பு)

தந்தையொருவர் செலுத்திய முச்சக்கரவண்டியில் சிக்குண்ட ஒன்றரை வயது நிரம்பிய ஆண்குழந்தையொன்று சம்பவ இடத்திலேயே பலியான சம்பவம் பிபிலைப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

பிபிலைப் பகுதியின் நன்னபுராவ என்ற இடத்தைச் சேர்ந்த டி.எம். சேனுல சேகோன் என்ற ஒன்றரை வயது நிரம்பிய ஆண் குழந்தையே இவ்வாறு பலியாகியுள்ளது.

குறித்த குழந்தையின் தந்தை செலுத்திய முச்சக்கரவண்டி சில்லில், மேற்படி குழந்தை சிக்குண்டதையடுத்து, உடனடியாக அக்குழந்தை பிபிலை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. குழந்தையைப் பரிசோதித்த வைத்தியர்கள், அக்குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து விசாரணைகளை மேற்கொண்ட மெதகமை பொலிஸார், முச்சக்கர வண்டியை செலுத்திய குறித்த குழந்தையின் தந்தையை கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-03)

# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு மாரடைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறி சற்குணராசா மாரடைப்பின் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாரடைப்பு பாதிப்புக்கு உள்ளான துணைவேந்தர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்கான யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அவருக்கு மாரடைப்பிற்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டுவருகிறது. (ம-03, 18, 33)


**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991 இல் பிறந்த அரச தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு (6666)

077 102 0559



**கடை வாடகைக்கு**

இல 40,பலாலி வீதி,யாழ்ப்பாணத்தில் 20 அடி நீளம் 15 அடி அகலம் கொண்ட கடை உடன் வாடகைக்கு உண்டு. (6667)

தொடர்புகளுக்கு

076 342 8061


# பருத்தித்துறை நகர் பகுதியில் வாள்களுடன் குழு அட்டகாசம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகர் பகுதியில் வாள்களுடன் பத்து மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் ஒன்று பெரும் அட்டகாசம் புரிந்ததுடன் இரண்டு வாள்களையும் அப்பகுதியில் போட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை (22) மாலை பருத்தித்துறை தும்பளை வீதியில் சென்று கொண்டிருந்த யுவதி ஒருவரை வீதியில் வைத்து சிலர் மறித்துள்ளனர். இதனால் அப்பகுதியில் நின்றவர்களுக்கும் அவர்களுக்கும் இடையே வாக்குவாதம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து பத்து மோட்டார் சைக்கிள்களில் வாள்கள், கோடாரி மற்றும் கத்திகளுடன் வந்த கும்பல் அப்பகுதியில் விளையாட்டு மைதானம் ஒன்றில் நின்று இருந்த இளைஞர்களை துரத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது அப்பகுதியில் நின்றவர்கள் எதிர்ப்பினை காட்ட முற்பட்ட போது இரண்டு வாள்களை அப்பகுதியில் போட்டுவிட்டு அக்குழு தப்பிச் சென்றுள்ளது.

பருத்தித்துறை நகருக்கு அருகாமையில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் இருந்து 500 மீட்டர் தூரத்தில் பத்து மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் ஒரு கும்பல் வந்து பெரும் அட்டகாசம் செய்துவிட்டு சென்றமை அப்பகுதியில் பெரும் அச்சநிலையினை ஏற்படுத்தியுள்ளது. (ம-03.60)


புதிய பயிற்சி வகுப்புக்கள்

மகளிர்க்கான பயிற்சிகளின் புதிய பிரிவுகள்

**28 ஏப்ரல் 2021**

முதல் ஆரம்பமாகின்றன

- மணப்பெண்களை அலங்கரித்தல்
- ஃபேஷியல் மற்றும் ஐபுரோ சீரமைப்பு
- கேக் அலங்கரித்தலும் அலங்கார இணை உருக்கள் தயாரித்தலும்
- உடையமைத்தல்- தையற் பயிற்சி
- ஆரி எம்ப்ராய்ட்டரி வேலைப் பயிற்சி
- கூந்தல் தொடர்பான பயிற்சிகள்



(C-2023)

**தூரிகை நுண்கலை வளாகம்**

11,பொன் கந்தையா பாதை மத்திய கல்லூரி வீதி நெல்லியடி

241,யாழ் வீதி நாவலர்மடம் நெல்லியடி

தூரிகைக்கு துணை நிலையங்கள் எதுவும் கிடையாது


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# மரண அறிவித்தல்



## திருமதி சுசீலாதேவி தேவராசா

சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசீலாதேவி தேவராசா நேற்று (22.04.2021) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் தேவராசாவின் (ஸ்ரீ சக்கர ஆழ்வார் தேவஸ்தான முகாமையாளர்) அன்பு மனைவியும் நிர்மலதா, ரூபதாஸ் (லண்டன்), ரூபதா ஆகியோரின் அன்புத் தாயாரும் பாஸ்கரன் (போதனாசிரியர் - தொழிற்துறைத் திணைக்களம், சாவகச்சேரி), யாழினி (லண்டன்), தவபாலன் (யாழ். தொழிநுட்பவியல் கல்லூரி - ஊழியர்) ஆகியோரின் மாமியாரும் நிவேஜன் - வைஷ்ணவி, காலஞ்சென்ற அச்சுதன், ஆதித்தியன் (மாணவன் - களனி பல்கலைக்கழகம்), வித்தகி, கோசல்யன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), பிரவீன் ( யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), யதுன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற பஞ்சரத்தினம் மற்றும் பாலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் அழகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ருக்குமணியின் (செல்வி) அன்பு மச்சாளும் சாந்தகுமாரியின் சிறிய தாயாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2024)

" பூமகள் " காளி கோவிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய். தகவல் குடும்பத்தினர்


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532



குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**மனவளக்கலை யோகப் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் பெருமையுடன் வழங்கும் எளியமுறை யோகப் பயிற்சிகள். அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளியமுறை உடற் பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சிகள்
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம் : எதிர்வரும் 24.04.2021 சனிக்கிழமை தொடக்கம் 30.04.2021 வெள்ளிக்கிழமை வரை

நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரை

பயிற்சி வழங்குபவர்: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள் துணைப்பேராசிரியர் த. நந்தகுமரன் அவர்கள்

குறிப்பு: கொவிட் 19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**

இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொ.இல - 021 222 2772

(C-2022)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்கள் திறக்கப்படமாட்டாது

## கல்வி அமைச்சர் தகவல்



(கொழும்பு)

எதிர்வரும் 27 ஆம் திகதி பல்கலைக்கழகங்கள் திறக்கப்படமாட்டாது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் வைத்து அவர் இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் இரு வாரங்களுக்கு பல்கலைக்கழகங்களை மீளத் திறப்பதை ஒத்தி வைத்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த இரு மாதங்களின் பின்னர் மீண்டும் கொவிட் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# தமிழர்களுக்கு ஈழத்தை கொடுக்காதவர்கள் சீனாவிற்கு தனிநாட்டை கொடுக்கிறார்கள்

## —ராஜித சீற்றம்—



(கொழும்பு)

**சுமார் 2000 ஆண்டுகள் எம்முடன் வாழ்கின்ற மக்களுக்கு தமிழ் ஈழத்தை தர முடியாதெனக் கூறியவர்கள் சீனாவிற்கு வழங்குகின்றனர்.**

கூட்டாட்சி என்ற சொல்லைக்கூட விரும்பாத அரசாங்கம் தற்போது இலங்கைக்குள் சீன இராச்சியத்தை தோற்றுவிக்க முயற்சிக்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

அதிகாரப்பகிர்வு தொடர்பில் இந்த அரசாங்கமே பரவலாக கருத்துக்களைத் தெரிவித்தது. அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர பாடுபட்ட தேரர்கள் மாகாணசபை முறைமையை முற்றாக எதிர்க்கின்றனர்.

எனினும் இந்தியாவின் அழுத்தம் காரணமாக அதனை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. கூட்டாட்சி என்ற சொல்லைக்கூட விரும்பாத அரசாங்கம் தற்போது இலங் கைக்குள் சீன இராச்சியத்தை தோற்றுவிக்க முயற்சிக்கிறது.

அத்துடன் தற்போது சீன ஈழத்திற்கு வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுக்கின்றனர். சுமார் 2000 ஆண்டுகள் எம்முடன் வாழ்கின்ற மக்களுக்கு தமிழ் ஈழத்தை தர முடியாதெனக் கூறியவர்கள் சீனாவிற்கு வழங்குகின்றனர்.

அவ்வாறெனில் இவர்களின் தேசப்பற்று எங்கு சென்றது? இதுவும் தனியொரு ஈழமாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக இலங்கையின் இறையாண்மைக்கும் தனித்துவத்தன்மைக்கும் பாதிப்பு ஏற்படும் என ராஜித தெரிவித்தார். (நி-8)

# தீவிரமடையும் கொரோனா தொற்று மக்களே விழிப்புடன் செயற்படுங்கள்!



(நல்லூர்)

கொரோனாத் தொற்று நிலைமை தீவிரம் அடையலாம் என எதிர்பார்க்கப்படுவதனால், பொதுமக்களை விழிப்பாக செயற்படுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்மாவட்டத்தில்பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நடவடிக்கைகள் திட்டமிட்டபடி ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றது. அதற்குரிய சுகாதார வழிமுறைகளையும் சுகாதார வழிகாட்டல்களையும் சுகாதார மற்றும்கல்விஅமைச்சு இணைந்து மேற்கொண்டுள்ளன. அதன் அடிப்படையில் அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கல்விச் செயற்பாடுகள் வழமைபோல் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. தொற்று நிலைமை சற்று தீவிரம் அடையலாம் என எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக பொதுமக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும். குறிப்பாக நகரப்பகுதி மற்றும் மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் பொது மக்கள் அவதானமாக தங்களுடைய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அநாவசிய நடமாட்டங்களை தவிர்த்து தேவையானவற்றுக்கு மாத்திரம் வருகை தரலாம். அவ்வாறு வரும்போது முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி போன்றவற்றை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். அதேநேரத்தில் யாழ்.நகரப் பகுதியில் இராணுவத்தினரால் தொற்று நீக்கி திரவம் விசிறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். சுகாதாரப் பகுதியினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் என அரச அதிபர் தெரிவித்தார்.(நி-8-33)



மக்கள் வங்கியின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷவினால் அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது.

# யுரேனியத்துடன் பயணித்த சீனக் கப்பல் இலங்கை கடற்பரப்பில் இருந்து வெளியேறியது

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கதிரியக்க யுரேனியத்துடன் பயணித்த சீனக்கப்பல் நேற்று பிற்பகல் 1.30 அளவில் நாட்டின் கடல் எல்லையில் இருந்து வெளியேறியது.

குறித்த கப்பலில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு நிவர்த்திக்கப்பட்டதை தொடர்ந்து கப்பல் நாட்டின் கடல் எல்லையில் இருந்து வெளியேறியதாக இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் பணிப்பாளர் நாயகம் எச்.எல்.அனில் ரஞ்சித் தெரிவித்தார்.

நெதர்லாந்தின் ரொட்டர்டேமில் இருந்து சீனாவின் ஷங்காய் துறைமுகம் நோக்கிச் சென்ற கப்பல் கடந்த 20 ஆம் திகதி இரவு 9 மணியளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது.

குறித்த சரக்கு கப்பலில் யுரேனியம் இருந்ததாக அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமம் அறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# குன்றும் குழியுமான வீதி; புனரமைக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பிரதான வீதியில் காணப்படும் பாலத்தில் பாரிய குழி ஏற்பட்டு ஆபத்தான நிலையில் காணப்படுவதுடன் பிரதான வீதியும் மக்கள் பயணிக்க முடியாது சேதமடைந்து காணப்படுகிறது.

குறித்த பாலத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே இவ்வாறு குழி ஏற்பட்டது என்றும் இதனை புனரமைத்து தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துள்ளபோதும் இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள பிரதேச மக்கள் குறித்த பாலத்தை புனரமைத்து தருமாறும கோரிக்கை விடுத்தனர். (நி-8-315)

# சீனப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் எதிர்வரும் 27 ஆம் திகதி நாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வரை அவர் நாட்டில் தங்கியிருப்பார் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தாவை வீழ்த்தி ஹட்ரிக் வெற்றி பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ்



மும்பை மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.


இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 220 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து 221 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, 19.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக டூபிளஸிஸ் தெரிவு செய்யப்பட்டார். (6)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## 9 விக்கெட்டுக்களால் பஞ்சாப்பை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது ஐதராபாத்




சென்னை சேம்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியும் பஞ்சாப் கிங்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்து களமிறங்கியது.

அதன்படி முதலில் களமிறங்கிய பஞ்சாப் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அவ்வணி சார்பாக மயங்க் அகர்வால் மற்றும் ஷாருக்கான் ஆகியோர் தலா 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் கலீல் அகமட் 3, அபிஷேக் சர்மா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதனை அடுத்து 121 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 18.4 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கைக் கடந்தது.

ஜொனிபேர்ஸ்டோவ் 63, டேவிட் வோர்னர் 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் பேபியன் அலன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். ஆட்ட நாயகனாக பேர்ஸ்டோல் தெரிவானார். (6)





அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## இருபது-20 போட்டியில் கோலியை முந்தினார் கே.எல்.ராகுல்






ஐ.பி.டில்.போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணி நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத்திடம் 9 விக்கெட் வித்தியாசத்தில் மிகவும் மோசமாகத் தோற்றது.

இந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணி கப்டன் கே.எல்.ராகுல் 4 ரன்களை எடுத்தார். அவர் ஒரு ரன்னை எடுத்தபோது 20 ஓவர் போட்டிகளில் 5 ஆயிரம் ரன்னை எடுத்து சாதனை படைத்தார்.

5 ஆயிரம் ரன்னை அதிவேகத்தில் கடந்த விராட் கோலியின் சாதனையை ராகுல் முறியடித்தார்.

ராகுல் 143 இன்னிங்சில் 5 ஆயிரம் ரன்னை தொட்டார்.

விராட் கோலி 167 இன்னிங்சில் தான் 5 ஆயிரம் ரன்னை கடந்து இருந்தார்.(6)

## புதுவருட கிண்ணத்தை கைப்பற்றியது அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி



வருடந்தோறும் புதுவருடத்தை முன்னிட்டு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் கால்பந்தாட்ட போட்டி 7 ஆவது தடவையாக வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக் கழக அணியினரும் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியினரும் மோதிக் கொண்டனர்.

போட்டி இறுதி நேரம் வரை எந்த அணிகளும் எந்தவித கோல்களையும் போடாத நிலையில் தண்ட உதை மூலமாக அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றிவாகை சூடினர். (6-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினரை இலக்கு வைக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தக் கூடாது-சர்வதேச மன்னிப்புச்சபை

(கொழும்பு)

**சிறுபான்மையினரை இலக்கு வைத்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மிகவும் மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படக்கூடாது.**

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டி பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது என ச்ர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்கள் இடம்பெற்று இரு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அதனை முன்னிட்டு சர்வதேச மன்னிப்புச் சபையினால் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பதிவில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் சுமார் 250 இற்கும் அதிகமானோரைக் காவுகொண்ட உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்கள் இடம்பெற்று இரு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

அந்தக் குண்டுத்தாக்குதல்களில் தமது அன்பிற்குரியவர்களை இழந்தவர்களுக்கு எமது இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

அதேவேளை எந்தவொரு சமூகத்தையும் அடக்குமுறைக்கு உட்படுத்தக்கூடிய வெறுப்புணர்விற்கு எதிராக ஒன்றுபட வேண்டும்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுப்பதுடன் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அவ்விசாரணை சர்வதேச தரத்திற்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை விமர்சகர்களையும் சிறுபான்மையினரையும் இலக்கு வைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எவ்வித விசாரணைகளுமின்றி அவர்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைப்பதற்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற மிகவும் மோசமான சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது.

அதனை மறுபரிசீலனை செய்வதற்கும் முடிவிற்குக் கொண்டு வருவதற்கும் இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது. (நி-8)

## ராஜித உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன உள்ளிட்ட மூவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் திகதி எதிர்வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி தீர்மானிக்கப்படவுள்ளது.

முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கியமையால், அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தி அவர்களுக்கு எதிரான இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-8)

# செயல்திறன் அற்ற சேவை, ஊழல், தாமதம் போன்றவற்றை இல்லாதொழிப்போம்


(கொழும்பு)

"பொதுமக்களுக்கு சேவை வழங்கும் அரச நிறுவனங்களின் மூலம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து கொள்ள முடியாது" என்ற குற்றச்சாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

கொவிட் தொற்றுக் காலத்திலும் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்ட பல்வேறு விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மக்களிடம் காணப்படும் மனக்குறைக்கு காரணம் சில அரச நிறுவனங்களில் நிலவுகின்ற செயல் திறன் அற்ற சேவை, ஊழல், தாமதம் போன்றவையாகும் என்று மக்கள் குறிப்பிடுகின் றனர்.

செயல் திறன் மிக்க அரச சேவைக்காக இராஜாங்க அமைச்சர்களின் நேரடி தலையீடு மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இராஜாங்க அமைச்சர்களுடன் மாதாந்தம் இடம் பெறும் மீளாய்வுக்கூட்டம் நேற்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



"மக்களுடனேயே எமது பலம் இருக்கிறது. அவர்களின் தேவைகளை உடனடியாக நிறைவு செய்ய வேண்டும்.

பிரச்சினைகளை காது கொடுத்து கேட்பதுடன், மக்களிடமிருந்து தூர விலகி நிற்காமல் செயற்படுங்கள்" என்று ஜனாதிபதி இராஜாங்க அமைச்சர்களிடம் தெரிவித்தார். (நி-8)

# பாராளுமன்ற வளாகத்தில் வைத்து ஆளுங்கட்சி உறுப்பினர் மீது தாக்குதல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி மீது பாராளுமன்ற வளாகத்தில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படுவதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவமானது நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கூடியபோது சபையில் எழுந்து முக்கிய விடயமொன்றை தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் மீது தாக்குதல் முயற்சி இடம்பெற்றிருப்பதை சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி மீது பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்படியான செயற்பாட்டினை ஏற்க முடியாது. பாராளுமன்ற பிரவேச வழியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதோடு பொலிஸார் கண் முன்னே இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. இது குறித்து விசாரணை நடத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்துள்ளார். (நி-8)

# உடனடித் தீர்வில்லையேல் போராட்டம்

(நெளுக்குளம்)

திருநாவற்குளம் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைக்கு உடனடியாக பாதுகாப்பு ஊழியர் ஒருவரை நியமிக்கத்தவறின், வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை குறித்த கடவையில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பொது மக்கள் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பல மாதங்களாக குறித்த கடவைக்கு பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நிறுத்தப்படவில்லை. அந்த கடவை நகரை அண்டி இருக்கின்றது. தினமும் அதிகமான மக்கள் அதனைப் பயன்படுத்தி வருவதுடன், புகையிரதம் வருவதை இலகுவில் அறிந்துகொள்ள முடியாத அபாயகரமான ஒரு பகுதியாக அது இருக்கின்றது.

குறித்த பாதுகாப்பற்ற கடவைக்கு ஊழியர் ஒருவரை நியமிக்குமாறு நாம் பலமுறை கோரிக்கையினை விடுத்தும் அது நிறைவேற்றப்படாமல் தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றது.



எனவே குறித்த கடவைக்கு பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நியமிக்கப்படாது விடின் பொது மக்கள் அனைவரும் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்தனர். (நி-8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் பல்கலை. வளாகம் அமைச்சரவை அனுமதி



(யாழ்ப்பாணம்)

**அனைத்து வசதிகளும் கொண்ட கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை சார் கற்கை நெறிகளைக் கொண்ட வளாகம் முல்லைத்தீவில் அமைக்கப்படவுள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

அனைத்து வசதிகளும் கொண்ட கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை சார் கற்கை நெறிகளைக் கொண்ட வளாகம் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதால், சுமார் 3400 மில்லியன் முதலீட்டில் 100 ஏக்கர் விஸ்தீரணமுள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் வளாகம் ஒன்றினை முல்லைத்தீவில் அமைக்கும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த விடயம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்ட நிலையில், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் கடற்றொழில் சார் மக்கள் பயனடையும் வகையில், றுகுணு பல்கலைக்கழகத்தின் கடற்றொழில்சார் கற்கைகள் பீடம் மாத்தறையில் அமைக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோன்று கடற்றொழிலாளர்கள் பயனடையும் வகையில் ஒரு பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக முன்வைக்கப்பட்டு வந்தன.


குறிப்பாக, 90களின் ஆரம்பத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்த பேராசிரியர் துரைராஜாவினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதைத்தொடர்ந்தும் பல்வேறு காலகட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நிறைவேறாத நிலையில், 2007 ஆம் ஆண்டில் இருந்து ஒரு பாடப் பிரிவாக கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை சார் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.


அதேவேளை முல்லைத்தீவில் முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பிரதேசத்தில் முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட யாழ்.பல்கலைக்கழக வளாகத்திற்கான முன்வரைவு ஒன்றும் பல்கலைக்கழக சமூகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக கடற்றொழில் மற்றும் கல்வி சார் ஆர்வலர்களினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

குறித்த விடயம் தற்போது அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, அங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (5-6)



யாழ்ப்பாணம் தீவகத்திலிருந்து யாழ். மாநகரத்துள் நுழைகின்ற பகுதியில் அமைந்துள்ள பண்ணைச் சுற்றுவட்டத்தினை அழகுபடுத்தி மீள்நிர்மாணப் பணிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் குறித்த பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (படம்: ரவிசாந்)



யாழ்ப்பாண நகரப் பகுதியில் அண்மையில் அதிகளவானோர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய நிலையில் நகரின் பஸார் பகுதி நேற்றுக்காலை இராணுவத்தினரால் தூய்மைப்படுத்தப்பட்டு கிருமித் தொற்று விசிறும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இராணுவத்தின் 51 ஆவது படையணி கட்டளை அதிகாரியின் வழிகாட்டலில் 512 ஆவது படைப்பிரிவினால் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன், ரவிசாந்)

# தொல்லியல் திணைக்கள வழக்கு தவிசாளர் பிணையில் விடுவிப்பு

(நல்லூர்)

தொல்லியல் திணைக்கள வழக்கில் வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் ஒரு இலட்சம் சொந்தப் பிணையில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமங்களுக்குத் தடை ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றே பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதி பொலிஸாருக்கு அறிவுறுத்தியதுடன் தவிசாளர் ஒரு இலட்சம் ரூபாய் செந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தொல்லியல் திணைக்களம் நிலாவரையில் மேற்கொள்ள இருந்த நடவடிக்கைக்கு தவிசாளர் தடை ஏற்படுத்தினார் என்றும் இதன் மூலம் அரச கருமத்திற்கு தடை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு தொல்லியல் திணைக்களத்தின் முறைப்பாட்டுக்கமைய அச்சுவேலி பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் மாலை எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில், தவிசாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி. திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

அவர்கள் தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானியில் நிலாவரைக் கிணறு என்றே அடையாளப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இக் கிணற்றில் இருந்து அப்பால் தான் தொல்லியல் திணைக்களத்தின் முயற்சி இடம்பெற்றுள்ளது.

பிரதேச சபை தொடர்ச்சியாக குறித்த இடத்தினை அரச பெறுகை கேள்வி கோரல் நடைமுறைகளின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கிவந்துள்ளது. பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக் கோவை சரத்தின் பிரகாரம் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றே மேற்படி வழக்கின் குற்றப் பத்திரத்தினைத் தாக்கல் செய்திருக்க வேண்டும்.

தொல்லியல் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சர் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதி பெற்றே தொல்லியல் திணைக்களம் செயற்படும் என உத்தரவாதமளித்துள்ளார்.

இதேவேளை மன்றில் பிரசன்னமாகியுள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மேலதிக விசாரணைகள் ஏற்படின் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் ஒரு இலட்சம் ரூபாய் சொந்தப் பிணையில் செல்வதற்கும் அனுமதியளித்தார். (5-6-33)

## சமுகமளிக்காதவர்களுக்கு பிடியாணை

(கரணவாய்)

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 36 பேருக்கு நெல்லியடி போக்குவரத்து பொலிஸாரினால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி முன் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிமன்றத்துக்கு 12 பேர் மட்டும் வருகை தந்திருந்தனர்.

அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து 4 இலட்சத்து 150 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வழக்கிற்கு வருகை தராதவர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (5-6-60)

# சாவகச்சேரியில் 11 வீதிகள் புனரமைப்புக்குத் தெரிவு

(சாவகச்சேரி)

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இரண்டாம் கட்டமாக 15 கிலோமீற்றர் நீளம் கொண்ட பதினொரு வீதிகள் காப்பெற் வீதிகளாக செப்பனிடுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட வீதிகளது விபரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் சாவகச்சேரி நகரசபைக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சங்கத்தானை-சப்பச்சி மாவடி வீதி, சோலை அம்மன் வீதி, பங்களா வீதி, ஆசிரியர் வீதி, சித்தன்மாவடி வீதி, கார்த்திகேசு வீதி, ஆடியம்பிட்டி வீதி, சண்முகம் வீதி,பத்தினியார் துரவு வீதி, தம்புதோட்டம் வீதி மற்றும் பெருங்குளம்-சங்கத்தானை வீதி ஆகிய பதினொரு வீதிகளே இவ்வாறு புனரமைப்பிற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (5-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-17 பலாலி வீதி ஆதன இல.54,58 என்ற வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் K. வைத்திலிங்கம் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு அ.அருள்செல்வன் முகதாவில் நிறைவேறிய 98ம் இலக்க 27.07.2020ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் சண்முகம் வேலாயுதமும் பெண் கலாநிதியும் தம்முடையது என வெளிப்படுத் தியுள்ளனர்.

ஆதன விபரம்:-வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் கிராம அலுவலர் பிரிவு சிறாம்பியடி J/79 வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை "இலகடி மக்கிக்கிடங்கு" நிலப்பரப்பு 2 ஆனால் ஆட்சிப்படியும் அளவின்படியும் நிலப்பரப்பு 1 குளி 14.09. வீடும் கடைக்கட்டிடமும் அரைவாசிக் கிணறும் அதற்குரியவைகளும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K. பரமேஸ்வரன் அவர்களால் 23.03.2019 திகதியில் 3884/2019ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது.

இதற்கெல்லை

கிழக்கு:- தேவராஜா பெண் பிறேமலதாவின் ஆதனம்
வடக்கு:- விக்கினேஸ்வரன் மகள் விஜிதாவின் ஆதனம்
மேற்கு: பலாலி வீதி
தெற்கு: அரியரட்ணம் பெண் வனிதா காந்தியின் ஆதனம் இதனடங்கலும்

தற்போது சண்முகம் வேலாயுதமும் பெண் கலாநிதி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின், பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சண்முகம் வேலாயுதமும் பெண் கலாநிதி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

(C-2017)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 57¼ செவ் 1 சூரி 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L, Data Entry Operator.<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம், தனியார்துறை தொழில், உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/356 | பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 40 செவ் 12 சூரி 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: லண்டன், கனடா, அவுஸ்திரேலியா வெளிநாடு மட்டும்.<br>தொ.இ: G/4155 |
| பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 30¼ செவ் 3 சூரி 12 இல்<br>உயரம்: 176cm<br>தகைமை/தொழில்: A/L, விற்பனைப்பிரதிநிதி (தனியார் 2 வருடம்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும், படித்த பெண்<br>தொ.இ: B/418 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 2 செவ் 9 சூரி 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.A பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது உள்நாடு உத்தியோகம்<br>தொ.இ: G/4157 |
| பிறப்பு: 1978 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 8 செவ் 6 சூரி 5 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L, தச்சு வேலை<br>எதிர்பார்ப்பு: தொழிலுள்ள, தொழிலற்ற பெண்<br>தொ.இ: B/430 | பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 62¾ செவ்.சூரி 8 இல்<br>தகைமை/தொழில்: A/L, தபால் கந்தோர் (5Month)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு அரச உத்தியோகம், வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்.<br>தொ.இ: G/4165 |
| பிறப்பு: 1968 இந்து நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 16½ செவ் 12 சூரி 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்- B.A,M.A, அரச நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அழகியபெண், அரச தொழில் பார்ப்பவர், உள் நாடு மட்டும்<br>தொ.இ: B/434 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 40 செவ்.சூரி 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L, தையல்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/4166 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# இங்கிலாந்து வைரஸுக்கு இணையான வைரஸ்?

(கொழும்பு)

நாட்டில் வங்கிகளுடன் தொடர்புடைய நிலையில் கொவிட்-19 தொற்றுறுதியானவர்களுக்கு, பெரும்பாலும் இங்கிலாந்தில் பரவும் கொரோனா வைரஸுக்கு இணையான வைரஸ் தொற்றியிருக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின், ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளரான கலாநிதி சந்திம ஜீவந்தர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

முழுமையான பரிசோதனைகள் நிறைவடைந்ததன் பின்னர், இது குறித்து விரைவில் பதிலளிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

**கால்நடைகள் விற்பனைக்குண்டு**

நல்லின ஜப்பான் ஜேசி 4 ஆம் ஈற்று மாடு
நிறைமாத சினையுடன்
ரூபா 95,000/-
நல்லின யமுனா பாரி ஆடு 2 ஆம் ஈற்றுடன்
இரண்டு குட்டிகளுடனும்
ரூபா 60,000/=
ஒரு வயது சாணன்கிடாய் ரூபா 50,000/=
உடன் விற்பனைக்கு (6999)

**தொடர்பு:**
**077 571 6437**

## சாரதிகளை நாட்கூலி அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை கோரல்-2021 மாநகர சபை யாழ்ப்பாணம்

மாநகர சபையின் தேவைகருதி சாரதிகளை நாட்கூலி அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கு, அவர்களை எமக்குத் தேவைப்படும் நேரத்தில் வழங்கக் கூடிய நிறுவனங்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இக்கூறுவிலைகளைச் சமர்ப்பிப்பதற்காக கூறுவிலைப் படிவங்களை அலுவலக நேரத்தில் மாநகர சபையின் கொள்வனவுக் கிளையில் 27.04.2021 ஆம் திகதி முதல் பெற்று அதனைப் பூர்த்திசெய்து கடித உறையினுள் உள்ளடக்கி உறையின் இடதுபக்க மூலையில் **"சாரதிகளை நாட்கூலி அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை-2021"** எனக் குறிப்பிட்டு **" முதல்வர்/ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு 12.05.2021 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்**

(C-2021)

# மணிவிழா வாழ்த்து



மணிவிழா நாயகி **திருமதி உமாநிதி புவனராசா**
(வலயக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு)
அவர்களை மனமார வாழ வாழ்த்துகின்றோம்

முத்தான முல்லைக் கல்வி வலயத்தில் என்றும் முழு மதியாய் பிரகாசித்து முல்லைக் கல்வித் திருவிளக்குக்கு ஒளிகொடுத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க மணிவிழா நாயகியை முல்லைப் பூச்சொரிந்து அகம் மகிழ வாழ்த்துகின்றோம்

### சேவை விபரம்

ஆசிரியராக 1989.01.20-2005.08.31 வரை
ஆசிரிய ஆலோசகராக 2005.09.01-2007.03.11 வரை
உதவிக் கல்விப் பணிப்பாளராக 2007.03.12-2011.02.28 வரை
பிரதிக் கல்விப் பணிப்பாளராக 2011.03.01-2016.12.13 வரை
வலயக் கல்விப் பணிப்பாளராக 2016.12.14-2021.04.25 வரை

(6628)

வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்புரிச் சங்கம், வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிமாவட்டங்களுக்கு ஏற்றப்படும் தேங்காய் மட்டைகள்

(தருமபுரம்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது தேங்காய் மட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தும்புத் தொழிற்சாலை தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

கிளிநொச்சி முழங்காவில் குமுழமுனை கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்காக தும்புத் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது. குறித்த தொழிற்சாலையில் அதே கிராமத்தில் வசிக்கும் பல பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு தொழில் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலையினால் பல குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல உதவி வருகிறது.

இந்நிலையில் தற்போது தேங்காய் மட்டைகள் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றப்படுவதாக குறித்த தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது பிரதேசங்களில் இருந்து மட்டைகள் அதிகளவில் ஏற்றுமதி செய்து வருவதால் தமது தொழில் நிலை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். இதனால் தற்போது தும்புத் தொழிற்சாலைகள் பல்வேறு இடங்களில் மூடப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த பிரச்சினையைக் கருத்திற்கொண்டு தமக்கான தீர்வொன்றை பெற்றுத்தருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (5-6-316)

# யானை தாக்கி காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணவாளன் பட்டமுறிப்பு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு காணி ஒன்றினுள் மின்சார வேலியையும் உடைத்துக் கொண்டு நுழைந்த காட்டு யானை தாக்கியதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மணவாளன்பட்டமுறிப்பு கிராமத்தைச் சேர்ந்த தனியார் ஒருவருடைய காணியில் அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த யானை வீட்டினை சேதப்படுத்தியதோடு வீட்டிலிருந்த உரிமையாளரான சிவராசா என்பவரையும் தாக்கிய நிலையில் காயமடைந்த அவர் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் காட்டு யானைகளுடைய தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் தொடர்ச்சியாக பயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு குறித்த மணவாளன்பட்டமுறிப்பு பகுதிகளை அண்டிய பகுதிகளில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தாக்குதல்களால் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த நபர் தன்னுடைய காணிக்கு மின்சார வேலியை அமைத்து இருந்தும் அதனை உடைத்துக் கொண்டு யானை உள்நுழைந்துள்ளது. ஆனால் அப்பகுதியில் பல குடும்பங்கள் மின்சார வேலிகள் கூட இல்லாமல் நாளாந்தம் அச்சத்தோடு வாழ்ந்து வருகின்றனர். (4-6-281)



மறைந்த நடிகரும் சமூகப் பற்றாளருமான விவேக்கின் நினைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் பத்தாயிரம் மரக்கன்றுகள் நடும் பணியை அகில இலங்கை தமிழ் இளைஞர் பேரவை முன்னெடுத்துள்ளது. அதன் முதற்கட்டமாக பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், இளைஞர் தொழிற் பயிற்சி மையங்கள், பொலிஸ் நிலையம் என பொது இடங்களில் இருநூறுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

(படம்:- சப்த[illegible])




# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி கரைச்சியின் வன்னேரிக்குளம் கிராமத்திற்கும் பூநகரியின் முக்கொம்பன் கிராமத்திற்கு இடையிலான வீதியினைப் புனரமைக்குமாறு இரு கிராம மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் வன்னேரிக்குளம் கிராமத்தில் இருந்து முக்கொம்பன் வழியாக பூநகரிக்குச் செல்லக் கூடிய வீதி இருந்தது.

வன்னேரிக்குளத்தின் குஞ்சுக்குளம் கிராம மக்கள் உவர்ப் பரம்பல்காரணமாக முழுமையாக இடம்பெயர்ந்ததன் காரணமாக குறித்த வீதியின் பாவனை குறைவடைந்தது. போர் நடைபெற்ற காலங்களில் குறித்த வீதி முழுமையாக மக்கள் பாவனையின்றி தற்போது வீதியின் இருபுறமும் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன.

குறித்த ஐந்து கிலோ மீற்றர் வரையான வீதி புனரமைக்கப்படுமானால் வன்னேரிக்குளம் கிராமத்தில் வாழ்கின்ற 500 வரையான குடும்பங்களும் முக்கொம்பன் கிராமத்தில் வாழ்கின்ற 600 வரையான குடும்பங்களும் இலகுவாக போக்குவரத்தில் ஈடுபட முடியும்.

வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தருகின்ற ஆசிரியர்கள் அக்கராயனுக்குச் செல்லாது முக்கொம்பன் வழியாகவே வன்னேரிக்குளத்தினைச் சென்றடைய முடியும். வன்னேரிக்குளத்தின் உற்பத்திப் பொருட்கள் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்திற்கு இலகுவாக எடுத்துச் செல்ல முடியும். எனவே இவ்வீதியினைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-6-350)

# நலன்புரிச்சங்க நிர்வாகத் தெரிவு

(தருமபுரம்)

தருமபுர பிரதேச வைத்தியசாலைக்கு புதிதாக நோயாளர் நலன்புரிச் சங்கம் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலை பொறுப்பு வைத்தியரின் தலைமையில் புதியநிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவராக நா. சந்திரகுமாரும் செயலாளராக திருமதி தயாபரன் சர்மிளாவும் பொருளாளராக தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் உறுப்பினர்களாக 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (5-6-350)

# த.தே.கூ. உறுப்பினர் தவிசாளராகத் தெரிவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் புதிய தலைவர் தெரிவு நேற்று இடம்பெற்றது.

இதில் புதிய தவிசாளராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கமலநாதன் விஜிந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற அமர்வில் 22 உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இரண்டு உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்காத நிலையில் 22 உறுப்பினர்களில் 15 பேர் ஆதரவாக வாக்களித்த நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் கமலநாதன் விஜிந்தன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.(5-6-281)

# கடுகதி புகையிரதம் மோதி 16 எருமை மாடுகள் சாவு

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை பகுதியில் 16 எருமை மாடுகளை கடுகதி புகையிரதம் நேற்றுக் காலை மோதியதில் அனைத்து மாடுகளும் பலியாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதம் ஓமந்தை பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த எருமை மாடுகளை மோதியது. இதன் காரணமாக பல இலட்சம் பெறுமதியான 16 எருமை மாடுகள் குறித்த இடத்திலேயே பலியாகியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் மேய்ச்சல் தரை இன்மையால் பலரும் தமது மாடுகளை மேய்ச்சலுக்காக வேறு இடங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் அவை வீதியோரங்கள், புகையிரத பாதைக்கு அருகிலேயே இரை தேடி வரும் நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த புகையிரதமே திருநாவல்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளையும் மோதியமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

23.04.2021
சித்திரை 10, வெள்ளிக்கிழமை
ஏகாதசி காலை 5.53 மணிவரை
பூரம் பின்னிரவு 3.00 மணிவரை
சுபநேரம் 6.00 - 7.30 மணிவரை
இராகுகாலம் 10.30 - 12.00 மணிவரை
சந்திராஷ்டமம்:- அவிட்டம்
ஏகாதசி விரதம். வளவன்


மேஷம்

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், வழிபாடு ஆனந்தம் தரும், தாழ்ந்த சுபாவமுண்டு.


ரிஷபம்

பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


மிதுனம்

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும்.


கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.


சிம்மம்

குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புகளும் கூடலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.


கன்னி

வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


துலாம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.


விருச்சிகம்

செய் தொழில் வளர்ச்சிக்கு அதிகம் பாடுபடுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் வாய்ப்புண்டு, இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுறுசுறுப்பான நாள்.


தனுசு

தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.


மகரம்

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கும்பம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


மீனம்

நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், உடல் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழிலில் மேன்மையுண்டு.

ஒரு நல்ல நண்பன் நூறு உறவினர்களுக்குச் சமம்

# தமிழர்கள் வாழ்கின்ற காரணத்தினாலா தமிழ் பிரதேச செயலகம் தரமிறக்கப்பட்டது?

## கஜேந்திரகுமார் கேள்வி



(கொழும்பு)

உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரமிறக்கப்பட்டு உப பிரதேச செயலகமாக அறிவிக்கப்பட்டுள்ளதை ஏற்க முடியாதென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற காரணத்தினாலா இவ்வாறு பாகுபாடு பார்க்கப்படுகின்றது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற விளையாட்டுத்துறை அமைச்சின் ஊக்கமருந்து தடை தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் தரமிறக்கப்பட்ட விடயத்தை அவசர நிலையாகக் கருதி இதனை மீள் பரிசீலனை செய்யுமாறு கோருகின்றேன். இவ்விடயம் தனியாக கையாளப்பட வேண்டும்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தனி பிரதேச செயலகமாக செயற்பட அனுமதிக்க வேண்டும். இவ்விடயம் தொடர்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் கவனத்துக் கொண்டு செல்லுமாறு இங்குள்ள அரச தரப்பினரைக் கோருகின்றேன்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரமிறக்கப்பட்டு உப பிரதேச செயலகமாக அறிவிக்கப்பட்டுள்ளதை ஏற்க முடியாது. இது பாரபட்சமான செயற்பாடு என்பதுடன் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவும் உள்ளது என அவர் தெரிவித்தார். (நி-8)

# 119 ஐ



# அநாவசியமாகப் பயன்படுத்த வேண்டாம்-பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

**திடீர் விபத்துக்கள், அனர்த்தங்கள், பாரிய குற்றச் செயல்கள் என்பன தொடர்பில் அறிவிக்க மட்டுமே 119 அவசர அழைப்பு இலக்கத்தைப் பயன்படுத்துமாறு பொலிஸார் தெரிவித்தனர்.**

அன்றாடம் இடம்பெறும் திடீர் விபத்துக்கள், அனர்த்தங்கள், பாரிய குற்றச்செயல்கள் தொடர்பில் துரிதமாக பொலிஸாருக்கு அறிவிப்பதற்கு 2004 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவு எனப்படும் 119 துரித அழைப்பு சேவையை சிலர் அநாவசியமான முறையில் பயன்படுத்துவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

119 அவசர அழைப்புப் பிரிவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொண்டதன் பின்னர் இந்த நிலைமை கண்டறியப்பட்டுள்ளது.

புள்ளிவிபரங்களின் படி நாளொன்றுக்கு 3000 இற்கும் அதிகமான அழைப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளமை தெரிய வருகிறது. இதனிடையே பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள நாளொன்றில் 8000 இற்கும் அதிகமானோர் முயற்சிப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

இந்த ஆய்வுக்கமைய, அவசர அழைப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் அழைப்புகளில் 93 சதவீதமானவை தேவையற்ற விடயங்களுக்காக மேற்கொள்ளப்படும் அழைப்பு எனத் தெரியவந்துள்ளது. இது பொலிஸ் அவசர பிரிவினரின் பணிகளுக்கும் இடையூறாக உள்ளது.

எனவே, திடீர் விபத்துகள், அனர்த்தங்கள், பாரிய குற்றச் செயல்கள் என்பன தொடர்பில் அறிவிப்பதற்காக மாத்திரம் 119 அவசர அழைப்பு இலக்கத்



தைப் பயன்படுத்துமாறு பொது மக்களிடம் பொலிஸார் கோருகின்றனர்.

இவ்விடயங்களைத் தவிர காணி தகராறு, உடன்படிக்கை குளறுபடிகள், காசோலை மோசடிகள் போன்ற சம்பவங்கள் தொடர்பில் 119 இற்கு அறிவிப்பதால் எவ்வித பயனையும் பெற்றுக்கொள்ள முடியாது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# பாடசாலை சீருடைத்துணி வழங்கும் பொறுப்பு உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைத் துணிகளை விநியோகிக்கும் பொறுப்பை உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவித்து பாடசாலை சீருடைத் துணிகளை அவர்களிடமிருந்து கொள்வனவு செய்ய அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.


அதன்படி கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்களிடம் அதற்கான விலை மட்டங்களைக் கோரி விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்திற்கான பாடசாலைச் சீருடைத் துணிகளை இந்த வருட இறுதி பாடசாலைத் தவணைக்கு முன்னர் மாணவர்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் முன்வைத்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குருபக்தி



துரோணர் என்ற முனிவர் ஒருவர் இருந்தார். அவர் அரசகுமாரர்களான பஞ்ச பாண்டவர்களுக்கும் கௌரவர்களான துரியோதனன் முதலான நூற்றுவருக்கும் குருவாக இருந்தார். அவர்களுக்கு வில் வித்தையை சிறப்பாகக் கற்பித்து வந்தார்.

வில் வித்தையில் அர்ஜுனனை விடச் சிறந்தவர் எவருமில்லை எனக் கூறும்படி செய்வதாக சபதம் செய்திருந்தார்.

இதனால் துரியோதனனுக்குக் கோபமும் பொறாமையும் அர்ஜுனன் மீது ஏற்பட்டிருந்தது. இயல்பாகவே அர்ஜுனன் வில்லில் அம்பை ஏற்றி எய்வதில் மிகவும் சிறந்தவன்.


அதனால் துரோணர் அர்ஜுனனிடம் தனி அன்பு கொண்டிருந்தார்.

ஒரு நாள் துரோணர் தன் மாணவர்களுக்காகக் காத்திருந்தார். அப்போது ஓர் ஏழைச் சிறுவன் வந்து துரோணரைப் பணிந்து நின்றான். அவனை ஆசிர்வதித்தார் துரோணர். "யாரப்பா நீ? எங்கு வந்தாய்?"

"குருவே!, நான் தங்களிடம் வில்வித்தை பயில வேண்டும் என விரும்புகிறேன். பல நாட்களாகத் தங்களைத் தேடித் திரிந்தேன். இன்றுதான் தங்களின் தரிசனம் கிடைத்தது. என்னைத் தங்கள் மாணாக்கனாக ஏற்றுக் கொண்டு அருள் செய்ய வேண்டும்"

"என்ன கேட்டாய்? உன்னை மாணவனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா? நான் அரச குடும்பத்தாருக்கு மட்டுமே கற்பிப்பவன். உன்னைப் போன்ற ஏழைச் சிறுவனுக்குக் கற்பிக்க மாட்டேன். அரசகுமாரர்கள் வரும் நேரம் நீ போய் வா. உனக்கேற்ற ஆசானைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வித்தையைக் கற்றுக்கொள். என் பூரண ஆசி உனக்கு. (தொடரும்)

# மகாபாரதம்




எல்லோரும் உணவு உண்டதும் சென்றால் அட்சய பாத்திரத்தில் உணவு பெருகாது. துருவாசருக்கு உணவு அளிக்கமுடியாது. அதனால் அவர் சினம் கொண்டு அவர்களுக்கு சாபமிட்டு அழித்து விடுவார் என எண்ணினான்.

துருவாசரும் பாண்டவர் இருக்குமிடம், தன் சீடர்களுடன் சென்றார். அவர்களை பாண்டவர்கள் முறைப்படி வரவேற்றனர்.

நீராடிவிட்டு வருவதாகக் கூறிவிட்டு, சீடர்களுடன் தடாகம் சென்றார் அவர். "அட்சய பாத்திரத்தில் இனி உணவு பெருகாதே" என திரௌபதி கலக்கமுற்றாள்.

கண்ணனை பிரார்த்தித்தாள். கண்ணனும் அவள் முன் தோன்றி தன் பசியை போக்கக் கோரினார். திகைத்தாள் திரௌபதி.

கண்ணன் அந்த அட்சய பாத்திரத்தைக் கொண்டு வருமாறு பணித்தார். அதில் ஒன்றும் இல்லை என்றவாறு அப்பாத்திரத்தை கொணர்ந்தாள் பாஞ்சாலி.

ஆனால் அதன் மூலையில் ஓரத்தில் ஒரு சோற்று பருக்கை இருந்தது. அதை எடுத்து கண்ணன் வாயில் போட பாரதம் முழுதும் பசி அடங்கியது. நீராடச் சென்ற முனிவருக்கும் பரிவாரங்களுக்கும் அவர்கள் இது வரை சுவைத்தறியா உணவு உண்ட திருப்தி ஏற்பட்டது.

அப்போதுதான் முனிவரும் காலமில்லா காலத்தில் தருமரின் ஆசிரம் சென்று, அவர்களை சோதனைக்கு உட்படுத்தியது தவறு என உணர்ந்தார். இப்படியாக துரியோதனனின் இம்முயற்சி தோல்வியடைந்தது.

### ஜயத்ரதன்

காம்யக வனத்தில் தங்கியிருந்த பாண்டவர்கள் ஒருநாள் வேட்டைக்குச் சென்றனர். திரௌபதி சில பணியாளர்களுடன் தனித்து இருந்தாள்.

அப்போது சிந்து நாட்டு மன்னன் ஜயத்ரதன் சால்வ தேசத்தை நோக்கி அக்காட்டு வழி சென்றான். அவனுடன் கோடிகாச்யன் முதலிய அரசர்களும் சென்றனர்.

ஆசிரமத்தின் வெளியில் நின்றுகொண்டிருந்த திரௌபதியை ஜயத்ரதன் கண்டான். கண்டதும் காதல்கொண்டான். அதை அவளிடம் வெளிப்படுத்தினான். திரௌபதி அது கொடிய செயல் என்றும் தனது வரலாற்றையும் கூறினாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் விநியோகம் தடைப்பட்டதால் 22 நோயாளர்கள் உயிரிழந்தனர்

## இந்தியாவில் துயரம்

(டில்லி)

இந்தியாவின் நாசிக் ஜாகிர் உசேன் மருத்துவமனையில் ஒட்சிசன் தொட்டி கசிந்ததில் 22 கொரோனா நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சம்பவம் நடந்த நேரத்தில் 171 நோயாளிகள் மருத்துவ மனையில் இருந்தனர்.

ஒரு ஒட்சிசன் டாங்கர் வைத்தியசாலையின் சேமிப்பு தொட்டியை நிரப்பிக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட இந்த அனர்த்தம் காரணமாக ஒட்சிசன் விநியோகம் தடைப்பட்டமையினால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

"கசிவு காரணமாக ஒட்சிசன் வழங்கல் சுமார் அரை மணி நேரம் நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக வென்டி லேட்டரில் இருந்த நோயாளர்கள் உயிர் இழந்தனர்" என்று நாசிக் மாநகராட்சி ஆணையர் கைலாஷ் ஜாதவ் தெரிவித்தார்.



"ஒரு தனியார் நிறுவனத்தால் வழங்கப்படும் ஒட்சிசன் தொட்டியின் கசிவு காரணமாக அழுத்தம் குறைந்துவிட்டதால் மக்கள் இறந்தனர்.

இந்த தொட்டியின் பராமரிப்பை அந்த நிறுவனம் கவனித்து வருகிறது" என்று நாசிக் மாவட்ட ஆட்சியாளர் சூரஜ் மந்தாரே தெரிவித்தார்.

மகாராஷ்டிராவின் முன்னாள் முதல்வரும், பா.ஜ.க. தலைவருமான தேவேந்திர ஃபட்னாவிஸ் இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தக் கோரினார். (நி-8)

## 'இறுதி வணக்கம்' பதிவிட்ட மருத்துவர் மரணம்

(டில்லி)

இது கடைசியாக நான் சொல்லும் காலை வணக்கமாக இருக்கலாம். இதன் பின்னர் உங்களை நான் சந்திக்க முடியாது போகலாம் என பேஸ்புக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பதி விட்ட இந்திய பெண் மருத்துவர் மறுநாள் உயிரிழந்தார்.

சிவ்ரி பகுதியில் அரச காசநோய் மருத்துவமனையில் சிரேஷ்ட மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வந்த 51 வயதான மனிஷா ஜாதவ் என்பவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். (நி-8)

## இந்தியாவில் எகிறும் தொற்றாளர் எண்ணிக்கை

## ஒரு நாளில் மட்டும் 3 இலட்சத்தை தாண்டியது

(டில்லி)

**இந்தியாவில் கொரோனாத் தொற்று பரவலின் இரண்டாவது அலை தீவிரமாக பரவி வருகிறது. இந் நிலையில், ஒரே நாளில் கொரோனாத் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 3 இலட்சத்தை கடந்துள்ளது.**

நேற்று முன்தினம் மட்டும் 3 இலட்சத்து 14 ஆயிரத்து 835 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள்.

2 ஆயிரத்து 104 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

கடந்த ஆண்டு கொரோனாத் தொற்று நோய் ஆரம்பமானதிலிருந்து இந்தியா ஒரே நாளில் பதிவு செய்த மிக உயர்ந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை இதுவாகும்.

இந்தியா முழுவதும் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 657 ஆக அதிகரித்துள்ளது.



இந்தியாவில் புதிய கொரோனாத் தொற்றாளர்களுடன் 22 இலட்சத்து 91 ஆயிரத்து 428 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி-8)

## ஒப்பந்தங்களை இரத்து செய்தது அவுஸ்திரேலியா

(சிட்னி)

தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியாவின் தேசிய நலனுக்கு எதிராக இருப்பதாக கூறி சீனாவுடனான 2 ஒப்பந்தங்களை அவுஸ்திரேலியா இரத்து செய்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் உள்நாட்டு அரசியலில் இரகசிய வெளிநாட்டு தலையீட்டை தடை செய்யும் நோக்கில் கடந்த 2018 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்த சட்டங்கள் சீனாவுக்கு எதிரான பாரபட்சம் கொண்டவை என சீனா கடுமையாக விமர்சித்தது. மேலும் இந்த விவகாரம் அவுஸ்திரேலியா- சீனா இடையிலான உறவை மோசமாக்கியது. இந்த நிலையில் இந்த தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியாவின் தேசிய நலனுக்கு எதிராக இருப்பதாகக்கூறி சீனாவுடனான 2 ஒப்பந்தங்களை அவுஸ்திரேலியா இரத்து செய்துள்ளது. (நி-8)

## நட்சத்திர ஹோட்டலில் பாரிய குண்டு வெடிப்பு

✹ 4 பேர் பலி ✹ 12 பேர் காயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தென் மேற்கு நகரமான குவெட்டாவில் அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டலின் வாகனத் தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன், 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த பாரிய வெடிப்பில் ஹோட்டலில் நிறுத்தப்பட்டிருந்த பல வாகனங்களும் தீக்கிரையாகியுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

## 44 ஆண்டுகள் பழைமையான நீர்மூழ்கிக் கப்பல் 53 பேருடன் மாயம் - தேடுதல் ஆரம்பம்



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் நீர்மூழ்கிக் கப்பல் 53 பேருடன் மாயமாகியுள்ளது.

44 ஆண்டுகள் பழமையான ஜேர்மனிய தயாரிப்பான இந்த நீர்மூழ்கிக் கப்பலுக்கு கே. ஆர்.ஐ.நங்காலா 402 என இந்தோனேஷிய அரசு பெயரிட்டிருந்தது.

நேற்று முன்தினம் பாலி தீவுகளுக்கு அருகே பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாக கூறப்பட்ட நிலையில், திடீரென நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து எந்த சமிக்ஞையும் பெறப்பட வில்லை.

இதையடுத்து காணாமல் போன நீர்மூழ்கிக் கப்பலைத் தேட இராணுவம் கப்பல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதற்குச் சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளிடமும் உதவி கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாயமான அந்த நீர்மூழ்கிக் கப்பலில் 53 ஊழியர்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3 074 781**

**தொற்று :-144 561 695**

**(நேற்றைய நிலவரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் எண்ணெய்கள் தொடர்பில் விழிப்புடன் இருப்போம்

திருமதி. சுபாஜினி சிவகாந்தன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விவசாய இரசாயனவியல் துறை,
விவசாய பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(நேற்றைய தொடர்ச்சி)

சமையல் தேவைகளுக்காக எண்ணெய் வகைகளைத் தேர்ந்தெடுக்கும் போது அவற்றின் பாதுகாப்பு (அப்லாடொக்சின்கள் போன்ற அபாயகரமான நச்சுப் பதார்த்தங்களைக் கொண்டிருக்காமை), ஊட்டச்சத்து மற்றும் அதிக வெப்ப நிலையில் பயன்படுத்துவதற்கு (முக்கியமாகப் பொரிப்பதற்கு) ஏற்ற தன்மை ஆகிய மூன்று முக்கிய அம்சங்களை நாங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஊட்டச்சத்து மற்றும் பொரிப்பதற்கு ஏற்ற தன்மை ஆகியன எண்ணெய்களில் உள்ள கொழுப்பமிலங்களின் வகைகளைப் பொறுத்தது. எண்ணெய்களில் முக்கியமாக மூன்று வகையான கொழுப்பமிலங்கள் உள்ளன. அவையாவன, நிரம்பிய கொழுப்பமிலங்கள், ஒரு நிரம்பாத பிணைப்பைக் கொண்ட கொழுப்பமிலங்கள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட நிரம்பாத பிணைப்புக்களைக் கொண்ட கொழுப்பமிலங்கள் என்பனவாகும். இந்த மூன்று வகைகளில் ஒன்று மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட நிரம்பாத பிணைப்புக்களைக் கொண்ட கொழுப்பமிலங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியமானவையாகும். இவை எமது உடலில் நல்ல கொழுப்புக்களை அதிகரிக்க உதவுகின்றன.

இந்த வகையான கொழுப்புக்கள் இருதய ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியமானவையாகும். நிரம்பிய கொழுப்பமிலங்கள் ஆரோக்கியத்திற்குத் தேவையெனினும் அவற்றை அதிகளவில் உட்கொள்ளும் போது அவை எமது உடலில் கெட்ட கொழுப்புக்களை அதிகரிப்பதன் மூலம் இருதய நோய்களுக்கு வழி வகுக்கும்.

எனவே நமது ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நாம் நிரம்பிய கொழுப்பமிலங்களைக் குறைந்த அளவிலேயே உட்கொள்ள வேண்டும். அதேநேரத்தில் நிச்சயமாக நம் உணவுகளில் நிரம்பாத கொழுப்பமிலங்களையும் சேர்க்க வேண்டும். உலகளாவிய ரீதியில் பெறப்பட்ட தரவுகளின்படி பல நாடுகளில் உள்ள மக்கள் நிரம்பிய கொழுப்பமிலங்களை உட்கொள்ளும் அளவு பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட மிக அதிகமாகும். அதேநேரத்தில் நிரம்பாத கொழுப்பமிலங்களை உட்கொள்ளும் அளவு பெரும்பாலும் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட மிகக் குறைவாகும்.

பொரிக்கும்போது எண்ணெயில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள் முக்கியமாக எண்ணெய்களில் உள்ள கொழுப்பமிலங்களின் வகைகளிலேயே தங்கியுள்ளது. நிரம்பிய கொழுப்பமிலங்கள் பொரிக்கும்போது மிகக் குறைந்த மாற்றங்களுக்கே உட்படுகின்றன. எனவே அதிகளவு நிரம்பிய கொழுப்பமிலங்களைக் கொண்ட எண்ணெய்கள் பொரிப்பதற்குப் பொருத்தமானவையாகும். இருப்பினும் நிரம்பிய கொழுப்பமிலங்களை அதிகளவில் உட்கொள்வது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அதிக வெப்ப நிலையில் பொரிக்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட நிரம்பாத பிணைப்புக்களைக் கொண்ட கொழுப்பமிலங்கள் டிரான்ஸ் கொழுப்புகளாக மாற்றப்படுகின்றன. அவை மனித ஆரோக்கியத்திற்கு மிகவும் தீங்கு விளைவிப்பனவாகும். முக்கியமாக அவை இருதய நோய் மற்றும் புற்றுநோய் போன்றவற்றுக்கு வழிவகுக்கும். நிரம்பிய கொழுப்பமிலங்களுடன் ஒப்பிடும்போது டிரான்ஸ் கொழுப்புகளால் ஏற்படும் தீங்குகள் மிக அதிகம். ஒரு நிரம்பாத பிணைப்பைக் கொண்ட கொழுப்பமிலங்கள் நிரம்பிய கொழுப்பமிலங்களுடன் ஒப்பிடும்போது அதிக மாற்றங்களுக்கு உட்படுகின்றன.




இருப்பினும் ஒன்றுக்கு மேற்பட்ட நிரம்பாத பிணைப்புக்களைக் கொண்ட கொழுப்பமிலங்களுடன் ஒப்பிடும்போது ஒரு நிரம்பாத பிணைப்பைக் கொண்ட கொழுப்பமிலங்களில் அதிக வெப்ப நிலையில் பயன்படுத்தும் போது மிகவும் குறைந்தளவான மாற்றங்கள் மட்டுமே நிகழ்கின்றன. இவற்றைப் பற்றி எளிதில் புரிந்து கொள்ளவதற்காக எமது நாட்டில் கிடைக்கும் எண்ணெய்கள் மற்றும் அவற்றில் உள்ள கொழுப்பமிலங்களின் வகைகள் ஆகியன அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

இந்த விஞ்ஞான ரீதியான தகவல்களின் அடிப்படையில் எங்கள் நாட்டில் கிடைக்கின்ற எண்ணெய் வகைகளின் தரம் பற்றி நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் பின்வரும் தகவல்கள் பயனுள்ளவையாக இருக்கும்.

தற்போது எமது நாட்டில் பல வகையான எண்ணெய்கள் கிடைக்கின்றன. அவற்றில் தேங்காய் எண்ணெய் (கொப்பரா எண்ணெய்), வெர்ஜின் தேங்காய் எண்ணெய், பாம் எண்ணெய், நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் ஆகியவை முக்கியமானவை. இந்த வகை எண்ணெய்களில் கொப்பராவிலிருந்து உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெயைத் தவிர மற்ற எல்லா எண்ணெய்களிலும் அப்லாடொக்சின்கள் காணப்படுவதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு.

மற்ற எண்ணெய் வகைகளுடன் ஒப்பிடும்போது தேங்காய் எண்ணெய் அதிகளவில் நிரம்பிய கொழுப்பமிலங்களைக் கொண்டிருப்பதனால் பொரிப்பதற்கு மிகவும் பொருத்தமான எண்ணெயாகும். இருப்பினும் தேங்காய் எண்ணெயின் பாதுகாப்பு தொடர்பான தற்போதைய பிரச்சினை காரணமாக வீட்டுத் தேவைகளுக்கு எண்ணெய்களைத் தேர்ந்தெடுக்கும் போது நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

வெர்ஜின் தேங்காய் எண்ணெய் தேங்காயிலிருந்து (கொப்பராவாக மாற்றாமல்) நேரடியாக தயாரிக்கப்படுகிறது.

எனவே இந்த எண்ணெயில் அப்லாடொக்சின்கள் காணப்படாது. மேலும் இந்த எண்ணெய் அதன் ஊட்டச்சத்து அடிப்படையில் கொப்பராவிலிருந்து தயாரிக்கப்படும் தேங்காய் எண்ணெயுடன் ஒப்பிடும்போது ஆரோக்கியமான எண்ணெய் என்பது ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஏனெனில் இது உடலுக்கு நன்மை பயக்கும் இயற்கையான சில மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது. தற்போது இது வெளிநாடுகளில் ஒரு பிரபலமான எண்ணெயாகும். எவ்வாறாயினும் இந்த எண்ணெயின் விலை ஒரு சாதாரண குடும்பத்தினால் கொள்வனவு செய்ய முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது. மேலும் இது எல்லாக் கடைகளிலும் பரவலாகக் கிடைப்பதில்லை. எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெர்ஜின் தேங்காய் எண்ணெயின் பெரும்பகுதி பிற நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சூரியகாந்தி எண்ணெய் அதிகளவில் ஒன்றுக்கு மேற்பட்ட நிரம்பாத பிணைப்புக்களைக்கொண்ட கொழுப்பமிலங்களைக் கொண்டிருப்பதால் ஆரோக்கியத்திற்கு உகந்தது. எனினும் பொரிப்பதற்கு ஏற்றதல்ல. ஏனெனில் மேலே குறிப்பிட்டுள்ளது போல அதிக வெப்ப நிலையில் பொரிக்கும்போது இந்த நிரம்பாத் கொழுப்பமிலங்கள் டிரான்ஸ் கொழுப்புகளாக மாற்றப்படுகின்றன.

அவை மனித ஆரோக்கியத்திற்கு மிகவும் தீங்கு விளைவிப்பன. மேலும் கடைகளிலிருந்து நாம் கொள்வனவு செய்யும் சூரிய காந்தி எண்ணெயில் டிரான்ஸ் கொழுப்புகள் காணப்படும் வாய்ப்பு உள்ளது.

(தொடரும்)

**எண்ணெய் வகைகளும் அவற்றில் உள்ள கொழுப்பமிலங்களின் வகைகளும்**

| எண்ணெய் வகைகள் | நிரம்பிய கொழுப்பமிலங்கள் (%) | ஒரு நிரம்பாத பிணைப்பைக் கொண்ட கொழுப்பமிலங்கள் (%) | ஒன்றுக்கு மேற்பட்ட நிரம்பாத பிணைப்புக்களைக் கொண்ட கொழுப்பமிலங்கள் (%) |
|---|---|---|---|
| தேங்காய் எண்ணெய் (Coconut oil/ Copra oil) | 80 - 90 | 5 - 10 | 1 - 2 |
| வெர்ஜின் தேங்காய் எண்ணெய் (Virgin coconut oil) | 80 - 90 | 5 - 10 | 1 - 2 |
| பாம் எண்ணெய் (vegetable oil/ Palm oil ) | 43 - 52 | 40 - 46 | 10 - 14 |
| நல்லெண்ணெய் (Sesame oil) | 12.5 - 18.5 | 36 - 42.5 | 42 - 48.5 |
| ஒலிவ் எண்ணெய் (Olive oil) | 8 - 30 | 55 - 83 | 3.5 - 21 |
| சூரியகாந்தி எண்ணெய் (Sunflower oil) | 8 - 15 | 14 - 39 | 48 - 75 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடுவோம்

## மாவை தெரிவிப்பு

(கொழும்பு)

**மாகாண சபை முறைமை தொடர்பான அரசின் யோசனை மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட் பாளர் விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் கலந்துரையாடவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

மாகாண சபைத் தேர்தலை காலம்தாழ்த்தாது நடத்த வேண்டிய கட்டாயத்தில் அரசு இருப்பதாகவும் தேர்தலுக்கு எதிராக தென்னிலங்கையில் இனவாதப் போக்குடைய சிலர் கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று



இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபை முறைமையில் மாற்றத்தைக் கொண்டுவர அரசு யோசனை முன் வைத்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோருடன் தான் கலந்துரையாடவுள்ளதாகவும் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டார். (நி-8)

# கோட்டாவின் முடிவுக்கு கட்டுப்பட மாட்டோம்

## திட்டமிட்டபடி பேரணி நடக்கும்

(கொழும்பு)

திட்டமிட்டபடி இந்த ஆண்டும் மே தினப் பேரணியை நடத்தவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அதில் கலந்து கொண்டு பேசிய ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க இந்த முடிவை உறுதிப்படுத்தினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,



"புத்தாண்டுக் கொண்டாட்டங்கள், பேரணிகள், ஒன்றுகூடல்கள் எனக் கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளில் சுகாதார வழிகாட்டுதல்களைப் பற்றி கவனம் செலுத்தாத அரசு, மே தினப் பேரணிகளை நடத்துவதற்கு தடை விதித்துள்ளமைக்குப் பின்னால் ஒரு அரசியல் நோக்கம் உள்ளது என்பது தெளிவாகின்றது.

தனது அரசியல் நோக்கத்துக்காக அரசு மே தினப் பேரணிகளை நிறுத்தி வைக்க முடிவெடுத்தாலும் அந்த முடிவுக்கு ஜே.வி.பி. கட்டுப்படாது.

அந்த அடிப்படையில் மே தினப் பேரணியை நடத்துவதற்கு ஜே.வி.பி. அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது" என அவர் தெரிவித்தார். (நி-4)

# நாட்டிற்கு அச்சுறுத்தலாக மாறும் நாடு திரும்பும் இலங்கையர்கள்

(கொழும்பு)

கொரோனா முடக்க நிலை காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்களை மீட்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு நாடு திரும்புவோரில் பலருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகி வருகின்றமை புதிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

அண்மைய நாட்களில் அதிகளவான எண்ணிக்கையில் இவ்வாறு நாடு திரும்பிய இலங்கையர்களுக்கு தொற்று உறுதி செய்யப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இவ்வாறு கடந்த மூன்று நாட்களில் மாத்திரம் நாடு திரும்பியுள்ள இலங்கையர்களில் மேலும் 99 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய் [illegible] (நி-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பசியைத் தூண்டலாம்!

"வயிறு பசிக்கின்றதே" என்பது சிலருடைய கவலை. "வயிறு பசிக்க மாட்டேங்குதே" என்பது சில பேருடைய கவலை. இரண்டு விதமான கவலைக்கும் வயிறு தான் காரணமாக இருக்கின்றது.

வயிறு பசித்தது என்றால் அது இயற்கை. வயிறு பசிக்க வில்லை என்றால் அது வியாதி. ஆனால் பசியையும் நாம் பசிப்பிணி என்று தான் சொல்வோம். என்ன காரணம்?

வியாதியைப் போக்க வேண்டியது எவ்வளவு முக்கியமோ அதை விட முக்கியம் பசியைப் போக்க வேண்டியது. ஒரு சமுதாயத்திலே பசிப்பிணியே இருக்கக் கூடாது. அது தான் நல்ல சமுதாயம்.

பசியைப் போக்க வேண்டும் என்றால் சாப்பாடு போட வேண்டும். பசியின்மையைப் போக்க வேண்டும் என்றால் வைத்தியம் தான் செய்ய வேண்டும். இது சம்பந்தமாக எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடக்கின்றது. நிறைய மருந்தும் கண்டு பிடித்திருக்கின்றார்கள். எங்கள் உடம்பிலே பசியைத் தூண்டக் கூடிய பகுதி எது? இதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?

நாம் சாப்பிடுகின்ற ஆகாரம் செரிப்பதற்கு எது காரணம் தெரியுமா? எங்கள் மூளையின் பின் பகுதி தான் அதற்குக் காரணமாக இருக்கிறது.

மூளையின் பின் பகுதியிலே நரம்பு செல்களால் ஆன இரண்டு வகையான 'ஆரெக்சின்கள்' தான் பசியை உண்டாக்குகின்றது என்று கண்டு பிடித்திருக்கின்றார்கள். இரண்டு ஆய்வாளர்கள் இதைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். அவர்கள் இரண்டு பேரும் டெக்சாஸ் பல்கலைக்கழகத்திலே ஹோவர்டு ஹக்ஸ் மருத்துவக் கல்வி நிலையத்திலே பணிபுரிகின்றவர்கள்.

உண்பது தேவை என்பது உணரப்படும்போது மூளையின் அந்தக் குறிப்பிட்ட பகுதி 'ஆரெக்சின்' என்கின்ற ஹார்மோன்களைச் சுரக்கும். அது பசி உணர்வைத் தூண்டும் என்பதுதான் அந்த ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு. இந்த 'ஆரெக்சின்' வேறு சில உயிர் இனங்களிலேயும் உண்டு. எலிகளிலேயும் உண்டு. அதனால் எலிகளை வைத்து இது சம்பந்தமான ஆராய்ச்சியை செய்தார்கள்.

எலிகள் உடம்பில் ஆரெக்சினைச் செலுத்திப் பார்த்தார்கள். உடனே என்ன ஆகிவிட்டது தெரியுமா? அந்த எலிகள் எல்லாம் பசியாலே துடிக்க ஆரம்பித்துவிட்டது. எதையாவது தின்று பசியைத் தீர்த்தால் போதும் என்ற அளவுக்கு அந்த எலிகள் எல்லாம் அல்லாட ஆரம்பித்துவிட்டது.

இயல்பாக சாதாரணமாக அந்த எலிகள் எவ்வளவு சாப்பிடுமோ அதைவிட எட்டு முதல் பத்து மடங்கு அதிகமான ஆகாரத்தை ஓரிரண்டு மணி நேரத்துக்குள்ளே சாப்பிட்டுத் தீர்த்துவிட்டதாம்.

சில எலிகளின் மூளையில் இந்த 'ஆரெக்சின்' அளவை கட்டுப்படுத்திப் பார்த்திருக்கின்றார்கள். உடனே அது எல்லாம் சாப்பாட்டைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொண்டு போக ஆரம்பித்துவிட்டதாம்.. அந்த எலிகளுக்குப் பசி எடுக்கவில்லையாம்.

இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் பசி எடுக்காமல் இருக்கின்ற மனிதர்களுக்கும் பசியைத் தூண்ட முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

ஆக 'ஆரெக்சின்' தான் பசிக்குக் காரணம் என்பது தெரிந்து போய்விட்டது. சரி... 'ஆரெக்சின்' அப்படி என்றால் என்ன? அது ஒரு கிரேக்கச் சொல். அதற்கு பசி என்று அர்த்தம்.

நம்ம ஆட்களுக்கெல்லாம் பசியைத் தூண்டுவதற்கு மருந்து தேவையில்லை. பசியைக் குறைப்பதற்குத்தான் மருந்து தேவை. ஒரு அம்மா டாக்டரைத் தேடி வந்தார்கள்.

டாக்டர்... எங்கள் வீட்டுக்காரருக்கு திடீர் என்று அகோரப் பசி ஏற்பட்டுப் போச்சு! நிறைய சமைத்துப் போடுகின்றேன். அவ்வளவையும் சாப்பிட்டுவிட்டு... கீழே கிடக்கின்ற குப்பை கூழங்களையும் எடுத்து சாப்பிட ஆரம்பித்துவிட்டார். என்ன என்று பாருங்கள் என்றார்.

எவ்வளவு நாளாக இப்படி இருக்கு? என்று கேட்டார் டாக்டர்.

ஒரு வாரமாக இப்படி இருக்கு என்றார்.

இவ்வளவு நாளாக ஏன் சும்மா இருந்தீர்கள்? ஆரம்பத்திலேயே இங்கே அழைத்துக் கொண்டு வர வேண்டியது தானே? என்றார். வீடு முழுவதும் சுத்தமாகட்டுமே என்று காத்துக் கொண்டு இருந்தேன் [illegible] என்றார் அந்த அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 21 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இவ்வாறு அப்பிரசுரத்தில் பொதுவான வேண்டுகோள் விடப்பட்டிருந்தது.

20.1.1982

◆ யாழ். நூல்நிலைய புனரமைப்புக்கு நிதிதிரட்டும் பணியில் தொழில் பிரமுகர்கள் குழு.

24.2.1982

◆ நூலகத்துக்கு வைக்கப்பட்ட தீ தமிழினத்துக்கு ஏற்பட்ட சவால்! இதனைக் கட்டி எழுப்புவது தமிழினத்தின் தூய கடமை - நூலக வார ஆரம்பத்தில் அமிர்.

25.02.1982

◆ யாழ். பொது நூலகத்தை கட்டி முடித்து மீண்டும் பூத்துக் குலுங்க வைப்பது தமிழரின் தலையாய கடமை - கொடிதின ஆரம்ப விழாவில் தலைவர் அமிர் கோரிக்கை.

◆ யாழ். நூலக வாரத்தையொட்டி வியாழக்கிழமையன்று நூலக கொடி தினம் அனுட்டிக்கப்பட்டது.

யாழ் முதல்வர் இராஜா விசுவநாதன் முதலாவது கொடியை எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்துக்கு அணிவித்து கொடி விற்பனை தினத்தை ஆரம்பித்து வைத்தார்.

21.05.1982

◆ பொது நூல்நிலைய நஷ்ட ஈடு. யாழ். முதல்வரிடம் உடன் 10 லட்சம் ரூபாய் காசோலை ஐக்கிய தேசியக் கட்சி- கூட்டணி பேச்சுவார்த்தையில் முடிவு யாழ்ப்பாணப் பொது நூல் நிலையத்துக்கு லயனல் பெர்னாண்டோ குழு சிபாரிசு செய்த ஒரு கோடி ரூபா நஷ்ட ஈட்டில் பத்து லட்சம் ரூபாவை ஜனாதிபதி நிதியிலிருந்து உடனடியாக காசோலையாக யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்கு வழங்கப்படும். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவரத்தன தலைமையில் புதன் கிழமை மாலை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி-தமிழர் விடுதலைக் கூட்டணி உயர்மட்ட பேச்சுவார்த்தையில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தீ வைப்பு வன்செயல் சம்பவங்களில் பாதிப்புற்ற பொதுமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் லயன்ஸ் பெர்னாண்டோ குழு சிபாரிசு செய்த ஒரு கோடி ரூபா நட்ட ஈட்டை வழங்கும் வழிமுறைகள் குறித்து ஜனாதிபதி மாளிகையில் திறைசேரி அதிகாரியை அழைத்து நேற்று வியாழக்கிழமை ஆராய்வது என்றும் அங்கு முடிவானது.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் நடந்த பேச்சுவார்த்தையில் அரசாங்கத் தரப்பில் பிரதமர் ஆர். பிரேமதாச, அமைச்சர்கள் கலாநிதி நிசங்க விஜேரத்ன, ஜனாப் ஏ.சி.எஸ். ஹமித், கப்டன். சி.பி.ஜே.செனவிரத்ன, எஸ்.தொண்டமான், கே.டபிள்யு.தேவநாயகம், ரணில் விக்கிரமசிங்க, மேர்வின் குலரத்ன, பதில் அமைச்சர்கள் ஜனாப் நைனா மரிக்கார், எம்.எஸ். அமரசிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டணியின் தரப்பில் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம், கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம், வவுனியா எம்.பி. ரி. சிவசிதம்பரம், திருகோணமலை எம்.பி ஆர். சம்பந்தன், பட்டிருப்பு எம்.பி பூ. கணேசலிங்கம் யாழ். அபிவிருத்திச் சபைத் தலைவர்கள் எஸ் நடராசா, கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

3.6.1982

◆ தமிழனைத்தமிழனே அழித்துக் கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன். யாழ் உண்ணாவிரதத்தில் அமிர். சரியான தலைமையின்றி தவறான பாதையில் செல்லாதீர்.

◆ யாழ் பொதுநூல் நிலையம் எரிக்கப்பட்ட ஓராண்டுப்பூர்த்தியை முன்னிட்டு நூல்நிலையத்தின் முன்னால் நேற்றுக் கூட்டணியினர் உண்ணாவிரதம் இருந்து துக்கம் அனுட்டித்தனர். உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட யாழ். எம்.பி. வெ. யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம், மன்னார் எம்.பி பி.எஸ். சூசைதாசன் , கோப்பாய் எம்.பி. எம். ஆலாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். செல்வா நினைவாலயத்தின் முன்னால் தமிழ் ஈழ விடுதலை அணியினரும் மாணவர்களும் உண்ணாவிரதம் இருந்தனர்.

### யாழ்ப்பாணத்தில் நூலக வாரமும் கொடி தினமும்

1982 பெப்ரவரி 22 திங்கள் முதல் 28 ஞாயிறு வரை நூலக வாரமும் கொடி தினமும் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. மாநகர சபை முன்றலில் மேயர் இராஜா விசுவநாதன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. முதல் கொடியை எதிர்க்கட்சித் தலைவர் அ. [illegible] கிய நிகழ்வில் [illegible] கட்டி முடித்து மீண்டும் பூத்துக்குலுங்க வைப்பது தமிழர்களின் தலையாய கடமை என்வும் தீ மூட்டி எரித்தவர்கள் பார்த்துப் பிரமிக்கத் தக்க வகையில் புதிதாக கட்டப்படும் நூல்நிலையம் அமையவேண்டும் எனவும் தனது பேச்சின்போது குறிப்பிட்டார்.

நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா.பிரான்சிஸ் அடிகளார் யாழ். நகரின் அறிவுக் களஞ்சியமும் கலைக் கூடமாகிய நூல் நிலையத்திற்கு ஏற்பட்டநிலை தமிழ்மக்கள் மனதில் நீக்கமுடியாதகறையை ஏற்படுத்தியுள்ளது. நூல் நிலையத்திற்கு இடப்பட்ட தீ தமிழ்மகன் ஒவ்வொருவரினதும் அறிவையும் அழிப்பதற்கு இடப்பட்டதாகும்.




இந்நிலையில் எங்கள் நூல் நிலையத்தை பன்மடங்கு பெரிதாகக் கட்டி எழுப்புவது எங்கள் கடமையாகும். இதனை செயற்படுத்தும் நோக்குடனேயே முதற்கட்டமாக இந்த கொடி தினத்தையும் ஒழுங்கு செய்துள்ளோம்.இம் முதல் கொடியை எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் பெறுவது மிகவும் பொருத்தமானதாகும். நூல்நிலையம் தாங்கிய கொடியை உங்கள் இதயத்திற்கு மிக அண்மையில் அணிந்து கொண்டிருக்கிறீர்கள். இது நூல் நிலையத்தில் நீங்கள் கொண்டுள்ள பற்றை காட்டுகின்றது.

ஆனால் இதற்கு மேலாக நூல் நிலையமானது உங்கள் இதயத்தில் நிலையான,நீங்காத,மங்காத இடத்தைப் பெற வேண்டும். எவ்வாறு அன்று நூல்நிலையம் தீயிடப்பட்ட போது அமைதி இழந்து பதட்டமடைந்த நிலையில் காணப்பட்ட போது உங்கள் உள்ளத்தில் எழுந்த ஓர் எண்ணம் எங்கள் நூல்நிலையம் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்பதே. அன்று உங்கள் உள்ளத் தில் எழுந்த தீ இன்னும் தணியவில்லை என்பதைக் காண்கின்றேன். என்றும் தணி யாமல் இருக்கட்டும் என்று கூறினார். (நன்றி தங்க முகுந்தன் "யாழ்ப் பாணப் பொதுசன நூலகம் - உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு") தமிழ் நாட்டைச் சேர்ந்த ஓவியர் எம்.எம். சண்முகத்தின் முட்டைக்குள் வரையப்பட்ட ஓவியக் கண்காட்சி மூலம் 11,172 ரூபாய் நூலக நிதியாகப் பெறப்பட்டது.


### கொழும்பில், யாழ்ப்பாணப் பொதுசன நூலக வாரமும் கொடி தினமும்

நூலகத் திட்டத்துக்கு கொழும்பில் செல்வச் செழிப்புடன் வாழும் மக்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்று தீர்க்கதரிசனமும் அர்ப்பணிப்புமுள்ள யாழ்ப்பாண மாநகர பிதா இராஜா விசுவநாதன் எண்ணினார். அவரும் நகரசபையாரும் சேர்ந்து நவீனமான திட்டமொன்றை வகுத்தார்கள் "கொழும்பில் யாழ்ப்பாணப் பொதுசன நூலக வாரம்'.எனப் பெயரிட்டு அதற்கென ஒரு குழுவைத் தெரிவு செய்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்திற்குள்ளானது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்




(கொழும்பு)

மாலைதீவின் சுற்றுலா தலமான பிரதான சர்வதேச நுழைவாயிலான மாலே சர்வதேச விமான நிலையத்தில் வைத்து ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்தின் "A320neo" என்ற விமானம் சேதமடைந்தது.

நேற்று முன்தினம் மாலே சர்வதேச விமான நிலையத்தின் தரை சேவை வாகனத்துடன் தற்செயலாக மோதியமையினால் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றி மேலதிக விபரங்களை அறிய இலங்கை ஏய்ரர்லைன்ஸ் நிறுவனம் மாலே சர்வதேச விமான நிலையத்தை அணுகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



## விரதங்கள்

## சந்தோஷம் தரும் சங்கடஹர சதுர்த்தி

(தொடர்ச்சி)

### அமிர்த கலசத்தை மறைத்து வைத்த விநாயகர்

நாகை மாவட்டம் திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோவிலில் வலது புறம் கள்ளவாரணப்பிள்ளையார் சந்நிதி உள்ளது.

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலை கடைவதற்கு முன்னர் இந்த விநாயகரை வழிபட மறந்து விட்டனர். அமிர்தம் வெளிவந்ததும் அமிர்த கலசத்தை பிள்ளையார் எடுத்து மறைத்து வைத்து விட்டார்.

இதனால் இவருக்கு கள்ளவாரணப் பிள்ளையார் என்று பெயர் வந்தது. பின்னர் தேவர்கள் விநாயகரை வழிபட்டு அமிர்த கலசத்தை திரும்பப் பெற்றனர்.

### விரதம் இருக்கும் முறை

சங்கடஹர சதுர்த்தியன்று விரதம் இருப்பவர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி அலங்கரிக்கப்பட்ட விநாயகப்பெருமான் சிலை அல்லது படத்திற்கு விளக்கேற்றி விரதத்தைத் தொடங்க வேண்டும்.

### அறுகம்புல் மகிமை



பிள்ளையார் வழிபாட்டில் அறுகம்புல் இருப்பது அவசியம். விதை எதுவும் போடப்படாமல் வளரக்கூடியது அறுகம்புல். இதைப்போல மனிதனின் ஆத்மாவுக்கு விதை எதுவும் இல்லை. அது தானே ஏற்பட்டது. தானே ஏற்பட்ட ஆத்மா என்ற அறுகம்புல்லை உனக்கு காணிக்கையாக்கி வழிபடுகிறேன் என்பது இதற்கு அர்த்தம்.

கருணைக்கடவுளான விநாயகர் மனம் மகிழ்ந்து "வருடத்தில் ஆவணி மாத சதுர்த்தியன்று சந்திரனைப் பார்ப்பவர்கள் துன்பப்படுவார்கள்" என்று கூறி சந்திரனுக்குக் கொடுக்கப்பட்ட சாபத்தைக் குறைத்து விட்டார்.

மேலும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமிக்கு அடுத்து வரும் சதுர்த்தியன்று விரதம் இருந்து தம்மை வழிபடுபவர்களின் சங்கடங்களை எல்லாம் நான் நிவர்த்தி செய்வேன். அவர்கள் புண்ணிய பேறுகளை அடைவர் என்றும் திருவருள் புரிந்தார்.

இதைக்கேட்ட சந்திரன் தன் தவறை உணர்ந்து விநாயகரை குறித்து கடும் தவம் இருந்தான். அவனது தவத்துக்கு மனம் மகிழ்ந்த விநாயகர் அவனுக்கு அருள்புரிந்து வளரும் வரத்தை கொடுத்தார். அவ்வாறு சந்திரன் வரம் பெற்ற நாள் தேய்பிறை சதுர்த்தி தினமாகும்.

ஆகவே சதுர்த்தி திதி விநாயகருக்கு உகந்ததானது. வளர்பிறை சதுர்த்தி திதியை பார்த்தால் தீங்கு விளையும். பகவான் கிருஷ்ணர், செவ்வாய், புருகண்டி முனிவர் ஆகியோர் சங்கடஹர சதுர்த்தி விரதம் இருந்து விநாயகரின் அருளைப் பெற்றனர். முற்பிறவியில் நாம் செய்த வினையின் பயனால் நமக்கு இப்பிறவியில் சங்கடங்கள் வரும்.

சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகரை வழிபட்டால் அவர் எல்லாவிதமான இன்னல்களையும் போக்கி அளவில்லாத நன்மைகளையும் தருவார்.

ஒவ்வொரு மாதமும் சங்கடஹர சதுர்த்தி வந்தாலும் ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்திக்கு முன்னதாக வரும் சதுர்த்தி "மகாசங்கடஹர சதுர்த்தி" எனப்படும்.

அன்று வழிபாடு செய்தால் வருடம் முழுவதும் சதுர்த்தி விரதம் இருந்த பலன் கிடைக்கும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## குருநாகலில் ஒரு பகுதி தனிமைப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக குருநாகல் மாவட்டத்தில் பகுதியொன்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி குருநாகல் மாவட்டத்தின் தித்தவெல்லகம கிராம உத்தியோகத்தர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## அமைதியின்மையை ஆராய குழு

(கொழும்பு)

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமைதியின்மை தொடர்பில் ஆராய 7 சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதாக சபாநாயகரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

## உள்நாட்டு மதுபானப் போத்தல்களிலும் கியூஆர் குறியீடு

(கொழும்பு)

உள்நாட்டில் தயாரிக்கப்படும் அனைத்து மதுபான போத்தல்களிலும் கியூஆர் குறியீட்டை கொண்ட பாதுகாப்பு ஸ்டிக்கர் முத்திரைகள் ஒட்டும் செயற்பாடு ஜூலை முதலாம் திகதி தொடக்கப்படும் என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

கியூஆர் குறியீட்டைக் கொண்ட பாதுகாப்பு ஸ்டிக்கரின் துல்லியத்தை உறுதிப்படுத்த பொதுமக்களுக்கு ஒரு சிறப்பு கையடக்கத் தொலைபேசி பயன்பாடு மற்றும் குறுஞ்செய்தி சேவை வடிவமைக்கப்படும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 120 |
| தக்காளி | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | 120 | 120 | 120 |
| கரட் | 200 | 160 | 200 |
| பூசணி | 60 | 50 | 60 |
| புடோல் | 120 | 80 | 100 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 150 | 260 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 130 | 120 | 160 |
| பயற்றங்காய் | 50 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 120 |
| கறிமிளகாய் | 120 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 700 | 600 | 600 |
| போஞ்சி | 140 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 80 | 30 | 50 |
| தேசிக்காய் | 120 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 75 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 220 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 400 | 140 | 280 |
| முள்ளங்கி | 40 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 |
| வல்லாரை | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 24 லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் தருமபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (5-6-316)

# சட்டவிரோதச் செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தோட்டவெளி கிராமத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வந்த மண் அகழ்வு தற்போது நிறுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் ஜாட் அமைத்து கல் அரிந்து விற்பனை செய்யும் நடவடிக் கைகள் இடம்பெற்று வருவதாக தோட்டவெளி கிராம அபிவிருத் திச் சங்கத்தினர் தெரிவித்துள் ளனர்.

குறித்த கிராமத்தில் உள்ள காட்டுப்பகுதியில் அண்மைக் காலமாக காடுகள் அழிக்கப்பட்டு மண் அகழ்வு இடம்பெற்று வந்தது. பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் தற்போது குறித்த பகுதியில் மண் அகழ்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த காட்டுப்பகுதியில் தற்போது இரண்டு ஜாட் அமைக்கப்பட்டு மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு கல் அரிந்து வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருவ தாக குறித்த பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று வியாழக்கிழமை காலை தோட்ட வெளி கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் குறித்த பகுதிக்கு சென்று பார்த்த போது கல் அரியும் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்ததோடு, செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை நிறுத்துமாறு கோரிய போது தாம் கூலிக்கு கல் அரிபவர்கள் எனவும் எமக்கு எதுவும் தெரியாது எனக்கூறியதோடு தொடர்ந்தும் கல் அரியும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக தோட்டவெளி கிராம அபிவிருத்தி சங்கம் தோட்டவெளி கிராம உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியதோடு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மன்னார் பிரதேச செயலாளர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளதோடு, குறித்த சட்ட விரோத செயற்பாட்டை நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-285)

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் கணவன், மனைவி காயம்

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணை முசுரம்பட்டி பகுதியில் நேற்று முன் தினம் இரவு இனந் தெரியாத இருவர் வீடு புகுந்து வாள்வெட்டு தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதில் வீட்டிலிருந்த கணவன் மற்றும் மனைவி காயமடைந்த நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-6-316)

# சங்காபிஷேகம்

(குப்பிழான்)

திருநெல்வேலி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு சகஸ்ர சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8 மணியளவில் அபிஷேக ஆராதனைகளுடன் சகஸ்ர சங்காபிஷேகம் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து மாலை 5 மணியளவில் வசந்த மண்டப பூசை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்றுத் தொடர்ந்து அம்பாள் வீதி உலா வருதலும் இடம்பெறும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (5-6-18)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

கோண்டாவில் மேற்கு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இரத்ததான முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-6-181)




சஞ்சை




தருண்





நகுல்




சுபானி




மயூரி




கோபினா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை இல்லாத பயமும் கிடையாது. பயம் இல்லா நம்பிக்கையும் கிடையாது.

– வால்ட்டேர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# உயிராபத்து நெருங்கிவிட்டது!

வட பகுதியில் அதிலும் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றின் ஆபத்து உச்சக்கட்டத்தை அடைந்து உயிராபத்தை ஏற்படுத்துகின்ற கட்டத்துக்கு வந்துள்ளது.

தவிர, கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களைப் பராமரிப்பதுது, அவர்களுக்கு செயற்கைச் சுவாசம் வழங்குவது என்பன கடினமான விடயமாகிவிடும்.

ஆக, இதுவரை கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த வகையில், அவர்களைப் பராமரிப்பதும் அவர்களைக் காப்பாற்றுவதும் சுலபமாக இருந்தது எனலாம்.

ஆனால் நாளுக்கு நாள் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது நிலைமை எல்லை கடந்து போவது தவிர்க்க முடியாததாகி விடும்.

இந்நிலைமையானது கணிசமான உயிராபத்தை ஏற்படுத்திவிடும் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதற்கு மேலாக, யாழ்ப்பாணப் பொலிஸ் உத்தியோகத்தர்களிடமும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று இருக்கும் சந்தர்ப்பத்தில் தொற்றின் பரவுகை பொதுமக்களைக் கணிசமாகப் பாதிக்கும் என்பது அனுமானிக்கத்தக்கது.

இவை ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவுகின்ற போதிலும் அதனைக் கட்டுப்படுத்துவதற் கான நடவடிக்கைகளை எடுப்பதில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கான அதிகாரம் போதவில்லை என்பதையும் அனுமானிக்க முடிகின்றது.

அதாவது கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கை தொடர்பில் எதைச் செய்வதாக இருந்தாலும் அதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டிய சூழமைவு இருப்பதை ஊகிக்க முடிகின்றது.

மத்திய அரசோ! கொரோனா விடயத்தில் அதீத கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

அரசாங்கம் தனக்குள் இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும்போது, கொரோனா பற்றிச் சிந்திப்பது சாத்தியமில்லை.

அதிலும் யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று எனும்போது, அதன் தாக்கத்தை – பாதிப்பை அவர்கள் ஒருபோதும் பாரதூரமாகக் கருதமாட்டார்கள் என்பதுதான் உண்மை.

நிலைமை இதுவாக இருக்கும்போது, எங்களை நாங்கள் பாதுகாத்துக் கொள்ளுதல் என்ற இறுக்கமான தீர்மானத்துக்கு நாம் அனைவரும் வந்தாக வேண்டும்.

இல்லையேல், கொரோனாவால் ஏற்படப் போகும் உயிராபத்தைத் தடுப்பதும் தவிர்ப்பதும் **கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்பானதாகும்.**

## வெசாக் நிகழ்வுகள் திட்டமிட்டபடி இடம்பெறும்

(நல்லூர்)

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி திட்டமிட்டபடி தேசிய வெசாக் நிகழ்வு இடம்பெறும் என யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இம்முறை தேசிய வெசாக் தின நிகழ்வுகள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி சுகாதார நடைமுறைகளுடன் திட்டமிட்டபடி நயினாதீவில் இடம்பெறும் என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்கு பதில் அளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதாவது தேசிய வெசாக் நிகழ்வு என்பது ஒரு தேசிய நிகழ்வு. அதனை நிறுத்துவதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

எனினும் தேசிய நிகழ்வு என்பதன் காரணமாக தற்போது உள்ள கொரோனா நடைமுறைகளுக்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் குறித்த நிகழ்வானது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெறும் என தெரிவித்தார்.

(5-6-33)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### இறப்பும் ஆன்மீக இயல்பும்

இறப்பு உங்களை வாழ்க்கையின் மெய்மையோடு தொடர்பு கொள்ள வைக்கிறது.

இறப்பு ஒரு வெற்றிடத்தை, வெறுமையைத் தோற்றுவிக்கிறது.

ஆன்மா தன்னை வெளிப்படுத்திக் கொள்ள, வெறுமை ஒரு வளமான நிலம்.

செயற்றிறன்கள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் படைப்புத்திறன் யாவும் வெறுமையிலிருந்து ஊற்றெடுக்கின்றன. மீண்டும் வெறுமைக்கே திரும்பிச் செல்லும் போக்கு படைப்பிற்கு உண்டு.

வெறுமையைத் தவிர்க்கும் போதுதான் (AVOID) எல்லாப் பிரச்சினைகளும் வருகின்றன என்று ஒருவர் கூறியதும் எல்லோரும் சிரித்தனர்.

(தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மந்துவில், தாவளை, இயற்றாலை, வறணி, வறணி கலைவாணி, ஆழியவளை, கட் டைக்காடு, கட்டைக்காடு இராணுவமுகாம் (55ம் பிரிவு), கேவில் முள்ளியான், வெற்றிலைக் கேணி, வெற்றிலைக் கேணி முள்ளியான் இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில் 50 வீட்டுத் திட்டம், பாண்டியன்** குளம், அம்பாள்புரம், டொன் பொஸ்கோ, இளமருதங்குளம், கரும்புள்ளியான், கொம்புவைத்தகுளம், மூன்றுமுறிப்பு, மூன்று முறிப்பு டயலொக் கோபுரத்தடி, நட்டான்கண்டல் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, பாண்டியன்குளம், ஒட் டறுத்த குளம், பாலைப் பாணி, பட்டுபூச்சி, பாலிநகர், பனன்காமம் (மூன்று முறிப்பு), பாண்டியன் குளம், பொன்னகர், பூவரசங்குளம், செல்வபுரம், சிராட்டிக்குளம், சிவபுரம், வடகாடு, **வன்னி விளாங்குளம், வவுனிக்குளம், வீரப்** பராயங்குளம் (மூன்று முறிப்பு) விநா யகபுரம், **வன்னி வைரம் ஆகிய இடங்களிலும் மின் சாரம் தடைப்படும்.**

## டிப்பர் மோதியதில் ஆசிரியை படுகாயம்

### திக்கம் பகுதியில் சம்பவம்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனம் மோதியதில் ஆசிரியை ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை வடமராட்சி திக்கம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை பொலிஸார் துரத்திச் சென்று உள்ளனர். இதன் போது வேகமாக சென்ற டிப்பர் வாகனம் வளைவு ஒன்றில் எதிர்த் திசையில் வந்த ஆசிரியையான பொலி கண்டியைச் சேர்ந்த கண்ணதாசன் சந்தியா (வயது-33) என்பவரை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த குறித்த ஆசிரியை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பொலிஸார் டிப்பர் வாகனத்தை துரத்திச் செல்வது அப்பகுதியில் உள்ள சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளது.

மேலும் ஆசிரியை படுகாயமடைந்து விழுந்து கிடப்பதை பொலிஸார் பார்த்தும் விலகிச் செல்வதும் பின்னர் அந்தணர் ஒருவர் ஓடிவந்து ஆசிரியையைக் காப்பாற்றுவதும் கமராவில் பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸார் தங்களுக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை என தெரிவித்துள்ளனர். (ம-3,60)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**நெறியில்லாத நெறியில் சென்று பொருளீட்டி அப்பொருளால் செய்கின்ற அறத்துக் குப் புண்ணியம் குறைவாகவே வரும். பெண் களுக்கு கற்பு உயிரினும் உயர்ந்தது. கற்பிக் கப்படுவது கற்பு.**

**கல்லைப் போன்றது கற்பு என்றும் ஒரு பொருள் உண்டு. (கல்+பு= கற்பு). கல் பாரம் அதிகமானால் பிளந்து போகும். அது போல் ஒரு பெண்ணுக்கு இடையூறு வந்தால் அவள் உயிர் பிளந்து விடும். கல்யாணக் காலத்தில் கல்லை மிதிப்பதும் இந்தக் கருத்தை விளங்க வைக்கின்றது. கல்லைப்போல் கற்பில் நான் உறுதியாக இருப்பேன் என்று கல்லை மிதித்து உறுதி செய்து கொள்கிறார்கள். (தொடரும்)**

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### துன்பங்களைப் போக்கும் வெற்றிலை; 12 இராசியினரும் செய்ய வேண்டியது

**கடகம்**

வெற்றிலையில் மாதுளம்பழம் வைத்து வெள்ளிக்கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கஷடம் விலகும்.

**சிம்மம்**

வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து வியாழக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கஷடம் விலகும்.

**கன்னி**

வெற்றிலையில் மிளகு வைத்து வியாழக் கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் தீரும்.


**துலாம்**

வெற்றிலையில் கிராம்பு வைத்து வெள்ளிக் கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் தீரும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத ராசி பலன்கள்

## 14.04.2021 - 14.05.2021



தனுசு இராசி வாசகர்களே!

## வருமானம் திருப்திகரமாக இருக்கும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

பிலவ வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு பகவான் மாதத் தொடக்கத்தில் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். இதுவரை நீச்சம் பெற்றிருந்தவர், இப்பொழுது பலம் பெறுகின்றார். எனவே இல்லத்தில் சுபகாரியம் நடைபெறும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

### கூட்டுக்கிரக யோகம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 5 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தில், 9ஆம் இடத்திற்கு அதிபதியான சூரியன், 7, 10இற்கு அதிபதியான புதன், 6, 11இற்கு அதிபதியான சுக்கிரன், அஷ்டமாதிபதி சந்திரன் இணைந்திருக்கின்றனர். ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. எனவே குடும்பத்தில் சுபகாரியங்கள் படிப்படியாக நடைபெறும். கொடுக்கல் - வாங்கல்களை ஒழுங்கு செய்வீர்கள். தொழில் மற்றும் உத்தியோகத்தில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

### செவ்வாய் - சனி பார்வை

மாதத் தொடக்கத்தில் செவ்வாயின் பார்வை, சனி மீது பதிகின்றது. பொதுவாக செவ்வாய் - சனி பார்வை நல்லதல்ல. அதிலும் குறிப்பாக உங்கள் இராசிக்கு, தன- சகாய ஸ்தானாதிபதியான சனியை, பஞ்சம - விரயாதிபதி செவ்வாய் பார்ப்பதால் விரயங்கள் கூடும். விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய நேரமிது. பிள்ளைகளால் சில பிரச்சினைகள் உருவாகும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்படலாம். தொழிலில் குறுக்கீடு அதிகரிக்கும். கடன் சுமை கூடும்.

### ரிஷப - புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 28 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 6 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகங்கள் மறைவிடங்களில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். வெளிநாட்டில் இருந்து அனுகூல தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

### ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்

மே 8ஆம் திகதி, ரிஷப இராசிக்கு




சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள புதனோடு இணைந்து புத சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. வெகு நாட்களாக முயற்சித்தும் நடைபெறாத காரியம் நடைபெறும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த ஊதிய உயர்வு கிடைக்கும். அரசு உத்தியோகத்திற்கு ஏற்பாடு செய்தவர்களுக்கு அது கைகூடும். மனதில் உற்சாகமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

### சனியின் வக்கிர காலம்

மே 12 ஆம் திகதி முதல், மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிரம் பெறுகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. உங்கள் இராசிக்கு தன ஸ்தானம் மற்றும் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான சனிபகவான் வக்கிரம் பெறும்பொழுது, பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். எதையும் உடனடியாகச் செய்ய இயலாது. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கலாம். 'கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், எதிலும் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. சுபவிரயங்கள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் அமையலாம். பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். தாய்வழி ஆதரவு தக்க சமயத்தில் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வும், சலுகைகளும் கிடைக்கலாம்.



மகர இராசி வாசகர்களே!

## தன வரவில் பற்றாக்குறை ஏற்படலாம்

பிலவ வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியிலேயே வீற்றிருக்கின்றார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் வலுவாக உள்ளது. எனவே எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யுங்கள். தாராளமாக செலவழித்த உங்களுக்கு, தனவரவில் பற்றாக்குறை ஏற்படலாம்.

### கூட்டுக்கிரக யோகம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில், சப்தமாதிபதி சந்திரன், அஷ்டமாதிபதி சூரியன், 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் ஆகிய கிரகங்கள் இணைந்திருக்கின்றன. குறிப்பாக அஷ்டமாதிபதி சுக ஸ்தானத்தில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகளும், அமைதிக் குறைபாடும் ஏற்படலாம். யாரையும் நம்பி பொறுப்புகள் சொல்ல வேண்டாம். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் வரலாம். சிந்தித்துச் செயற்படுங்கள்.

### செவ்வாய்- சனி பார்வை

மாதத் தொடக்கத்தில் செவ்வாய், உங்கள் இராசியில் உள்ள சனியைப் பார்க்கின்றார். பொதுவாக செவ்வாய், சனியைப் பார்ப்பது நல்லதல்ல. அப்படி பார்க்குமேயானால் அதற்குரிய ஆதிபத்யங்கள் சிறப்பாக நடைபெறாமல் பிரச்சினைகளை ஏற்படுத்தும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பல காரியங்களில் தடைகள் ஏற்படும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. வாழ்க்கைத் தேவை கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் தடைகள் ஏற்படலாம்.

### ரிஷப - புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 28 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்பொழுது பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் இருந்ததடை அகலும். தந்தை வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். உறவினர்கள், உங்கள் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருப்பர்.




### ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்

மே 8 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். பஞ்சமாதிபதி பஞ்சம ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரத்தில் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். குறிப்பாக பெண் பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவீர்கள். தொழில் வளர்ச்சிக்கு தேவையான முதலீடு வந்து சேரும். குடும்பத்தில் மங்கல காரியம் நடைபெறும்.

### சனியின் வக்கிர காலம்

மே 12ஆம் திகதி முதல், மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிரம் பெறுகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. உங்கள் இராசிநாதன் வக்கிரம் பெறும்பொழுது பல வழிகளிலும் உங்களுக்குத் தொல்லைகள் வந்து சேரும். 'நிலைமை எப்பொழுது சீராகுமோ' என்று கவலைப்படுவீர்கள். உதிரி வருமானங்கள் வருவதில் தடை ஏற்படும். உயர்ந்த மனிதர்களின் பகை ஏற்படும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் பெருமாள், லட்சுமிதேவி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் யோசித்துச் செய்யுங்கள். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே நடத்த இயலாது. கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடு அதிகரிக்கும். விரயங்கள் கூடும். உடன்பிறப்புகள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளின் சுபகாரிய நிகழ்ச்சி துரிதமாக நடைபெறும். பெண்களுக்கு உடன்பணி புரிபவர்களால் தொல்லை உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்...

கள் கண்டனம் வெளியிட்டதோடு பல்கலை மாணவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் குதித்தனர்.

மாணவர்களின் கடும் அழுத்தத்தை அடுத்து மீண்டும் நினைவுத் தூபியை அதே இடத்தில் அமைப்பதற்கு முன்வந்த பல்கலை நிர்வாகம் கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி அதிகாலை அடிக்கல் நாட்டியது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உபவேந்தரின் அனுமதிக்கு அமைய இந்த அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிலையில் நினைவுத் தூபி கட்டுமானம் நிறைவுக்கு வந்த நிலையில் இன்று திறந்து வைக்கப்படுகிறது. (ம-3,18,33)

## திருநெல்வேலி...

நிலைமைகள் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கணபதிப்பிள்ளை மகேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரமளவில் திருநெல்வேலியில் முடக்கப்பட்ட இந்த கிராமத்தில் ஒரு பகுதியினை தவிர்ந்த ஏனைய பகுதியினை விடுவித்திருந்தோம்.

மேலும் பாரதிபுரம் என்னும் கிராமம் இன்று காலையில் இருந்து விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை சுகாதார பிரிவினர்கள் எடுத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

அங்கு நேற்று முன்தினம் 97 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் மூன்று நபர்களுக்கு மாத்திரமே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனையோருக்கு தொற்றில்லை. அந்த நிலைமை திருப்தியாக உள்ளது.

இதன் காரணமாக திருநெல்வேலி பாரதிபுரம் கிராமம் இன்றைய தினம் கண்காணிப்பு வலயத்தில் இருந்து விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (ம-3,18,33)

## சுகாதார நடை...

பில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே கணபதிப்பிள்ளை மகேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் தனியார் மற்றும் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் திட்டமிட்டபடி ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றது. அதற்குரிய சுகாதார வழிமுறைகளை சுகாதார வழிகாட்டல்களையும் சுகாதார மற்றும் கல்வி அமைச்சு இணைந்து மேற்கொண்டிருக்கின்றன.

அதன் அடிப்படையில் அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கல்வி செயற்பாடுகள் வழமைபோல் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவித்தார். (ம-3,18,33)

## யாழ்ப்பாணத்தில்...

ஆய்வுகூடம் என்பவற்றில் 396 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 5 பேருக்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட மூவருக்கும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும் கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் என 16 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## மிருசுவிலில்...

விடுதலை செய்யவும் அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஒரு மரண தண்டனை கைதியை விடுவிக்க சில பொறிமுறைகள் உள்ளன. இங்கு அவை பின்பற்றப்படவில்லை. ஜனாதிபதி பின் கதவால் தீர்மானங்களை எடுக்கின்றார்.

மரண தண்டனை கைதியை விடுவிக்க சிறைச்சாலைகள் ஆணையாளர் பரிந்துரை முன்வைக்க வேண்டும். பின்னர் ஓய்வுபெற்ற சட்டமா அதிபர் அடங்கிய குழுவை நியமிக்க வேண்டும். பாரிய குற்றம் செய்தவர் தொடர்பில் ஜனாதிபதிக்கு சமூக பொறுப்பு இருக்க வேண்டும்.

நன்னடத்தை தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இவை அனைத்தும் இங்கு பின்பற்றப்படவில்லை. இந்த அரசாங்கம் மரண தண்டனை கைதி சுனில் ரத்நாயக்கவுக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்தது.

சுனில் உள்ளிட்ட இராணுவ சிப்பாய்கள் மிருசுவிலில் 8 பேரை கொலை செய்து, கழுத்தை அறுத்து புதைத்தனர். மரண தண்டனை விதிக்கப்பட்ட அவரை விடுதலை செய்துள்ளீர்கள். நீங்கள் எவ்வாறு அத்தகைய செயல்களை அங்கீகரிப்பீர்கள்.

கொலைகாரன் கொலைகாரன்தான். பிரேமாவதி மனம்பேரியை கொன்றதும் இராணுவ சிப்பாயே. அவர் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்டார். இராணுவ வீரர்களை விடுவிக்கின்றோம் என நீங்கள் கொடி தூக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

## தமிழ் இளைஞர்...

சிரேஷ்ட அத்தியட்சகரும் ஊடக பேச்சாளருமாகிய அஜித் ரோஹண தெரித்தார்.

இலங்கை பொலிஸ் திணைக்களம் மற்றும் வடமாகாண பொலிஸ் நிலையத்தின் ஒன்றிணைந்த எற்பாட்டில் தொழில் வாய்ப்பற்ற நிலையிலிருக்கும் தமிழ் இளைஞர், யுவதிகளை பொலிஸ் சேவைக்கான ஆளணியினை எற்படுத்தும் வகையில் வட மாகாணத்தினை பிரதித்துவப்படுத்தும் கல்வி நிலையைச் சார்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தார்கள், இளைஞர், யுவதிகளை பிரதேச செயலகங்கள் ரீதியாக வலுவூட்டும் உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்கான செயலமர்வு நேற்று யாழிலுள்ள யு.எஸ்.ஹோட்டலில் இடம்பெற்றது.

குறித்த செயலமர்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டபோதே அஜித் ரோஹண இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பொலிஸ் நிலையத்தில் முழுமையான பங்களிப்பினை வழங்க எதிர்காலத்தில் ஒன்றிணைய வேண்டும். இது காலத்தின் கட்டாயமாக காணப்படுகின்றது.

இதன்மூலம் சுதந்திரமான ஜனநாயக ரீதியான நாட்டில் இன ஐக்கியத்தினையும் சமூக ரீதியான வலுவான கட்டமைப்பினை உருவாக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

குறித்த தமிழ் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ளும்போது அவர்கள் தமது சொந்த மாவட்டங்களில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து தமது சொந்த மாவட்டங்களிலே கடமை புரியவும் உள்ளனர் என்றார். (ம-3,18,33)

## இலங்...

நிறுவனத்தின் இயக்குநர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் பரவி வரும் உருமாறிய புதிய வகை கோவிட், பி.சி.ஆர் சோதனைகளில் எஸ்-புரதங்களை அடையாளம் காண்பதில் சிரமத்தைக் காட்டியுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் புதிதாக உருவாகி இருக்கும் கொரோனா அபாய நிலைமையையடுத்து, நாடளாவிய ரீதியிலோ அல்லது சில பகுதிகளையோ மூடுவது குறித்து இன்று இறுதி முடிவு எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று விசேட கலந்துரையாடல் நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் வைத்திய நிபுணர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், அமைச்சர்கள் உள்ளிட்டோர்கள் கலந்து கொள்வார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் நாடு மூடப்படாவிட்டால் நிலைமை மோசமடையக்கூடும் என்று நிபுணர்கள் ஏற்கெனவே எச்சரித்துள்ளனர்.

அதன்படி, எழுப்பப்பட்ட பிரச்சினைகள் குறித்து விவாதித்து ஜனாதிபதி இன்று இறுதி முடிவு எடுக்க உள்ளார். (ம-3)

## யாழில் நள்ளிரவு...

பன கைப்பற்றப்பட்டன.

அத்துடன் சந்தேக நபரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகளை வாங்கியமை, விற்றமை மற்றும் அடகு பிடித்தமை போன்ற குற்றச்சாட்டில் மேலும் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்த சிறப்பு நடவடிக்கையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. (ம-3,18,33)

## +657 பேருக்கு...

நேற்று 657 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இலங்கையில் 98,722 பேருக்கு இதுவரையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## கொழும்பு...

மத்திய நிலையமொன்றை ஏற்படுத்துவதற்கான யோசனையொன்றை தான் 2016ஆம் ஆண்டு அமைச்சரவையில் முன்வைத்ததாக அவர் தெரிவித்தார். (ம-3)

## 5 பேர் பலி...

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 634 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-3)


சேவன
திகதி 22/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 331
F 22 39 49 61

மெகா பவர்
திகதி 22/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0818
T 07 33 43 46 57

மஹஜன சம்பத
திகதி 2021/04/22
சீட்டிழுப்பு இலக்கம் 4459
X 8 2 3 9 2 2

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 22.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2754
O 05 32 40 54

தன நிதானய
திகதி -2021.04.22
சீட்டிழுப்பு இலக்கம் - 496
V 17 38 39 64

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1255
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 22.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 129,700,635
வெற்றி இலக்கங்கள் 10 13 29 51 Q

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3585
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 22.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,065,991
வெற்றி இலக்கங்கள் 43 51 62 65 V

சுப்பர் ஜக்பொட் 3,348,091/=
திகதி: 22.04.2021
வெற்றி வாரம்: 3136
வர்ணம்: மண்நிறம்
வெற்றி இலக்கங்கள் 07 28 38 46 விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,225,000

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1429
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 22/04/2021
தினம் வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் 52,802,406/=
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 44 46 56 59

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 427
திகதி 22.04.2021
வர்ணம் நீலம்
G 07 38 65 9
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,340,496
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய், கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். (கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்.)

(6676)

தொடர்பு கொள்ளும் நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் 5.30 மணி வரை

077 288 0152, 077 468 3354, 077 203 6402

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை கிழக்கு, ஐயனார் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
( தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 மீற்றர் தூரம் )

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
( தரகர் தேவையில்லை ) பரப்பு 5 இலட்சம்.

(6671)

077 814 7389
077 614 7333

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

(C-2005)

எமது கிளைகள்

கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777
v2vacancies@gmail.com





## வானவில் கலையகம்

உங்கள் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகள் எதுவானாலும் இணையத்தளம் மூலம் புலம்பெயர் நாட்டில் வசிக்கும் உறவுகள் நேரடியாகக் கண்டு உங்கள் இன்ப துன்பங்களில் உங்களுடன் ஒன்றித்து இருக்கும் வகையில் நேரடி ஒளிபரப்புச் செய்து கொள்ள அழையுங்கள்.

(6678)

077 248 7550, 071 860 0001, 077 659 6049

vanavilmedia.com, lankaripbook.com

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2004)

0768226240 DHL

## அன்னா

EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/=

070 3305500
077 888 9388

(C-2006)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை

பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை

மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மாணிக்கம் சாந்தகுமார்

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(6663)

பிறப்பு 22.01.1962


இறப்பு 23.04.2019

ஊரி, களபூமி, காரைநகர்.

பிரிவால் துயருறும் சகோதரர்கள்.

# ஆன்ம ஈடேற்ற பிரார்த்தனையும் 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப் படும் "



அமரர்

## தம்பிப்பிள்ளை கணேசலிங்கம்

திதி : பூர்வபக்க ஏகாதசி

மண்ணில் : 24.05.1954 விண்ணில் : 24.03.2021

ஆலமரமென நிழல் பரப்பிய நீங்கள்
உங்கள் நிழலில் வாழ்கின்ற
விழுதுகளாகிய நாங்கள்
உருவமாக இந்நாள் வரை வழிகாட்டிய நீங்கள்
அருவமாகி நீக்கமற நிறைந்திருந்து
எமது எதிர்காலத்துக்கும் வழிகாட்டி
ஆவீர்கள் என்ற நம்பிக்கையுடன்
மூத்தநயினாரின் திருப்பாதங்களில்
சேர்ந்துவிட்ட தங்களது ஆன்மா
ஈடேற்றம் பெற அவன்
தாழ் பணித்து வணங்குகின்றோம்.

### இதயம் கனிந்த நன்றிகள்

எங்கள் குடும்பத் தலைமகன் அமரர். தம்பிப்பிள்ளை கணேசலிங்கம் அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து எங்கள் துக்கத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நேரில் சமுகமளிக்க முடியாத நிலையில் கடிதம் மூலம் ரெலிமெயில் மூலம் இரங்கற்செய்தி அனுப்பியோருக்கும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்மாலை அணிவித்து அஞ்சலி புரிந்தவர்கள், அஞ்சலி உரைகளை நிகழ்த்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இம் மலருக்கான இரங்கற் செய்திகளைத் தந்தோருக்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டோருக்கும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் அனைத்து வழிகளிலும் முன்னின்று சகல ஒத்தாசைகளையும் புரிந்து எம்மை ஆறுதலடைய வைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை சிரம் தாழ்த்தித் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(6679)

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.